(ආ) අංක ඩීඑම්එස්/1591/5/3 හා 2018 සැප්තැම්බර් 19 දිනැති කළමනාකරණ සේවා දෙපාර්තමේන්තු කාර්ය මණ්ඩල අනුමත කිරීමේ ලිපිය අනුව සංස්ථාව සඳහා බඳවා ගැනීමේ පරිපාටියක් සකස් කර කළමනාකරණ සේවා දෙපාර්තමේන්තුවේ අනුමැතිය ලබාගැනීමෙන් පසුව පමණක් බඳවා ගැනීම් සිදුකළ යුතු බවට නියෝග කර තිබුණ ද, අනුමත බඳවාගැනීමේ හා උසස් කිරීමේ පරිපාටියක් නොමැතිව සංස්ථාව විසින් බඳවා ගැනීම් හා උසස් කිරීම් දිගින් දිගටම සිදුකර තිබුණි.

ඩබ්ලිව්.පී.සී.වික්‍රමරත්න

විගණකාධිපති

2018 විගණකාධිපති වාර්තාව සඳහා

සංස්ථාවේ පරිකථනය

ශ්‍රී ලංකා ගුවන්විදුලි සංස්ථාවේ 2018 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන සහ වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිලිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 වන වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව සම්බන්ධ සංස්ථා පරිකථනය

ඉහත සඳහන් වාර්තාව සඳහා සංස්ථාව විසින් සකස් කළ පිලිතුරු වාර්තාව පහත පරිදි ඉදිරිපත් කරමි.

1. 2 **මතය සඳහා පදනම**

1.2.1 **ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිතිවලට අනුකූල නොවීම**

අ **ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිත 01**

i සංස්ථාව සකස් කළ ගිණුම්වල එක් වර්ෂයක් පමණක් පෙන්වා ඇති අතර, ප්‍රමිතිය ප්‍රකාරව ඉදිරි වර්ෂවල ගිණුම් නිවැරදි කර ඇත.

ii විගණනය පෙන්වා දී ඇති ආකාරයට විදේශ විනිමය ලාභය මූල්‍ය පිරිවැයෙන් අඩුකර පෙන්වා ඇති බව පිළිගනිමි. 2019 ගිණුම්වලින් නිවැරදි කර ඇත.

ආ ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිත 08

2018 මූල්‍ය ප්‍රකාශනවල ඉදිරිපත් කර ඇති සෑම පූර්ව කාල පරිච්ඡේදයක් සඳහාම ප්‍රායෝගිකව හැකිතාක් දුරට මූල්‍ය ප්‍රකාශනවල රේඛීය අයිතමයක් සඳහා නිවැරදි කළයුතු මුදල හා ඉදිරිපත් කර ඇති පැරණිතම පෙර කාල පරිච්ඡේදය ආරම්භයේ නිවැරදි කරන ප්‍රමාණය මූල්‍ය ප්‍රකාශනයන්හි දක්වා ඇත. ප්‍රමිතය ප්‍රකාරව මූල්‍ය ප්‍රකාශනවල තොරතුරු හෙළිදරව් කිරීමට කටයුතු කර ඇත.

ඇ ශ්‍රී ලංකා ගිණුම්කරණ ප්‍රමිත 16

i වත්කමක පිරිවැය ලෙස දැක්විය යුතු වියදම් නඩත්තු වියදම් සේ සලකා තිබීම නිසා ස්ථාවර වත්කම් එම ප්‍රමාණයෙන් අඩුවෙන් දක්වා ඇති බව පිළිගනිමි. 2019 වසරේ නිවැරදි කර ඇත.

ii මිලදීගත් ට්‍රාන්ස්මීටර් 08 ස්ථාපිත කිරීම හා ක්‍රියාකාරිත්වය සම්බන්ධයෙන් ලබාදුන් පුහුණුවක් නිසා යන්ත්‍ර ක්‍රියාකරවීමට අදාල වියදමක් බැවින් වත්කම් ගිණුමට එකතු කිරීමට කටයුතු කර ඇත.

iii ප්‍රධාන කාර්යාලයේ මෘදුකාංග අයිතම්වල ශේෂය ගිණුම්කරණ සටහන්වල ශුද්ධ අගයට දක්වා ඇති බව පිළිගනිමි. 2019 වසරේ නිවැරදි කර ඇත.

iv ගිණුම් ප්‍රකාශනවල මෘදුකාංග සඳහා වන ක්ෂය අනුපාතය හෙළිදරව් කර නොමැති බව පිළිගනිමි. 2019 වසරේ සිට හෙළිදරව් කර ඇත.

1.2.2 ගිණුම්කරණ අඩුපාඩු

අ කොන්ත්‍රාත්තු කඩකල සැපයුම්කරුගේ කාර්ය සාධන බැඳුම්කරය මෘදුකාංග ගිණුමට බැර කිරීම නිවැරදි නොවන බවට විගණන නිරීක්ෂණය සමග එකඟ වෙමි. 2019 වසරේ නිවැරදි කර ඇත.

ආ වර්ෂය තුළදී අයකරගත යුතු අලාභ සටහන් ලෙස වෙන වෙනම හෙළිදරව් කිරීමට කටයුතු කර ඇත.

ඇ 2018 වාර්ෂික තොග සමීක්ෂණයේ හඳුනාගත් සංයුක්ත තැටි කැසට් හා සඟරා තොග භාණ්ඩ සමීක්ෂණ මණ්ඩලය මගින් 2019 වසරේදී ඉවත් කිරීමට කටයුතු කර ඇත.

ඈ මෘදුකාංග ක්ෂය වටිනාකම රාජ්‍ය ප්‍රධාන ක්‍රමක්ෂය ගිණුමට හර කිරීම නිවරදි නොවන බවට විගණන නිරීක්ෂණය පිළිගනිමි. 2019 වසරේ නිවැරදි කර ඇත.

ඉ අයකරගත යුතු මුදලක් ලෙස පාරිතෝෂික මුදලින් රඳවාගෙන තිබූ මුදල ආදායම් ලෙස ගිණුම්ගත කිරීම වැරදි බවට විගණන නිරීක්ෂණයට එකඟ වෙමි. 2019 වසරේ නිවැරදි කර ඇත.

ඊ අඩමාණය ණය වෙන් කිරීමේදී විදේශීය ගුවන්විදුලි සේවා 02න් ලැබිය යුතු ණය සඳහා අඩමාණ ණය වෙන්කර නොමැත.

උ 2008 ගිණුම් වර්ෂයේදී මෙම මුදල ප්‍රාග්ධන ප්‍රදානයක් ලෙස සලකා ගිණුම් තබා ඇතත්, මේවන විට ඌව ප්‍රජා ගුවන්විදුලියෙන් අයවිය යුතු මුදලට ගැලපුම් කර ඇත.

ඌ හුන්නස්ගිරිය විකාශනාගාරය සම්බන්ධිතව රාජ්‍ය වැවිලි සංස්ථාවට ගෙවිය යුතු බදු මුදල පිළිබඳව සමථයකට පත්වීම සඳහා අදාල කටයුතු කරමින් ඇත.

එ 2018-12-31 දිනට දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුවට ගෙවිය යුතු මුළු බදු වගකීම අඩුවෙන් දැක්වීම (රු89,725,536/-) නිවරදි කර ඇත.

ඒ මෙම බදු මුදල ඉවත්කර ගැනීම සඳහා අමාත්‍ය මණ්ඩල පත්‍රිකාවක් ඉදිරිපත් කර ඇති අතර ඒ අනුව ඉදිරි කටයුතු කිරීමට නියමිතය.

1.2.3 **නොසැසඳූ පාලන ගිණුම්**

අ ගුවන් කාල ණය හිමි උපලේඛන ශේෂය හා ගුවන් කාල ණය හිමි පාලන ගිණුමේ ශේෂය අතර වෙනසට හේතු සොයා නිවැරදි කර ඇත.

ආ 1989 සිට ලේඛන පරීක්ෂා කර බලා ලැබිය යුතු තැන්පතුවලට අදාලව උපලේඛන හා පාලන ගිණුම වෙන වෙනම අයවිය යුතු ශේෂ හඳුනාගෙන තවදුරටත් හඳුනාගත නොහැකි නමුත් අයකර ගතයුතු ශේෂය රු. 419680/-ක් ලෙස හඳුනාගෙන ඇත.

ඇ ගුවන්කාල ණයගැති ශේෂය මූල්‍ය ප්‍රකාශනවල හා උපලේඛන අතර නොගැලපීමට හේතුවී ඇත්තේ එකතු කළ අඟය උපලේඛණ ණයගැති ශේෂයට ගලපා නොතිබීමයි. 2019 වර්ෂයේ මෙය නිවැරදි කරඇත.

ඈ ගිණුම්වල ලැබිය යුතු අගය හා උපලේඛන අනුව ශේෂය 2019 වර්ෂයේදී නිවැරදි කර ඇත.

1.2.4 **විගණනය සඳහා සාක්ෂි නොවීම**

අ	නේෂන් ට්‍රස්ට් බැංකු ගිණුම් ශේෂ තහවුරු කිරීම	විද්‍යුත් තැපැල් මගින් ලබාගෙන ඇත.
ආ	ඉඩම් ස්ථාවර වත්කම් ලේඛනය භෞතික සත්‍යාපන වාර්තාව	ස්ථාවර වත්කම් ලේඛනය මුදල් අංශය මගින් සකස් කර ඇත. ඉඩම් ලේඛනය පාලන අංශය මගින් සකස් කර විගණනය වෙත ලබාදී ඇත. මධ්‍යම තරංග විකාශනාගාර පැවති යුගයේදී ලංකාව පුරා ඉඩම් විශාල ප්‍රමාණයක් සංස්ථාවේ සේවා අවශ්‍යතාවය මත භුක්තියට ලැබී තිබුණත් වර්තමානය වන විට මේවා ප්‍රාදේශීය ලේකම්වරුන්ගේ භාරයට පත්කර ඇත.
ඇ	ගොඩනැගිලි ස්ථාවර වත්කම් ලේඛනය භෞතික සත්‍යාපන වාර්තාව	අධ්‍යක්ෂ ඉංජිනේරු යටතේ සිවිල් ඉංජිනේරු අංශය මගින් භෞතිකව සත්‍යාපනය කිරීමට කටයුතු යොදා ඇත.
ඈ	ලක්හඬ වෙළඳ ණයගැතියෝ ලිපිගොනු විස්තර හා වටිනාකම සෑදී ඇති ආකාරය දැක්වෙන උපලේඛන	මෙම ශේෂය සනාථ කර ගැනීම සඳහා අදාල ගුවන්විදුලි ආයතනයෙන් විමසා ඇති අතර එම ශේෂ සම්බන්ධයෙන් සංස්ථා මණ්ඩලයට ඉදිරිපත් කර සුදුසු ක්‍රියාමාර්ග ගැනීමට නියමිතය.

1.3 **මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳ කළමනාකරණයේ සහ පාලනය කරන පාර්ශවයන්ගේ වගකීම**

කළමනාකරණයේ වගකීම සම්බන්ධයෙන් ඉදිරිපත් කර ඇති විගණන නිරීක්ෂණ නිවැරදි වේ.

1.4 **මූල්‍ය ප්‍රකාශන විගණනය සම්බන්ධයෙන් විගණකගේ වගකීම**

විගණනය ඉදිරිපත් කර ඇති කරුණු පිළිගනිමි.

2. **වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳ වාර්තාව**

2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ අවශ්‍යතාවයන් විශේෂ ප්‍රතිපාදන සම්බන්ධයෙන් ඉදිරිපත් කරනු ලබන තොරතුරු නිවැරදි වේ.

නීති රීති / විධිවිධානවලට යොමුව

අ. (i) 16 (2) ආ වගන්තිය හා හතරවන උපලේඛනය - නිවැරදි කර ඇත.

(ii) 10 (ස) ආ වගන්තිය - නිවැරදි කර ඇත.

ආ. මුදල් දුෂ්කරතා හේතුවෙන් මුද්දර බදු ගෙවීම ප්‍රමාද විය.

ඇ. ආයතන සංග්‍රහයේ 31.11.1 ඡේදය අනුව සාපරාධී වරදක් සම්බන්ධයෙන් අධිකරණය ඉදිරියේ නඩුවක් පවරා ඇති විටකදී අඩ වැටුප් ගෙවීමට නොහැකි වුවත්, එම නිලධරියාට සංස්ථා විනය බලධාරියා විසින් ඔහුට පැවරී ඇති බලතල අනුව

අඩවැටුප් ගෙවීමට අනුමතිය ලබාදෙන අවස්ථාවේ සාපරාධි වරදක් සම්බන්ධයෙන් චාර්තා වී තිබුණේ නැත.

ඈ. රාජ්‍ය මුදල් චක්‍රලේඛ 03/2015 අනුව හා සංශෝධිත මු. රෙ. 371(2) ආ 371(5) අනුව කටයුතු කළයුතු වුවත් වසර 13කට වඩා පැරණි 6000/- මුදල් ඉවත් කිරීමට කටයුතු කරමින් ඇත.

ඉ. i මු. රෙ. 110 අනුව හානි පාඩු ලේඛන පවත්වාගෙන යයි.

ii මුදල් රෙගුලාසි 396 ඇ(ii) හා (iii) අනුව වලංගු කාලය අවසන් වී ඇති චෙක්පත් සම්බන්ධයෙන් අදාල කටයුතු කර ඇත.

අ. ගුවන්විදුලි සංඛ්‍යාත තරංග පැහැදිලිව විසුරුවා හැරිය හැකි හොඳම ස්ථානය ලෙස කඳුරට සේවය ස්ථාපනය කරන අවස්ථාවේ තෝරාගෙන ඇත්තේ මෙම ඉඩමයි. එහි විකාශන කටයුතු මේ වන විටත් පවත්වාගෙන යන අතර ඉඩම පවරා ගැනීම සඳහා කටයුතු කරමින් ඇත.

ආ. ප්‍රසම්පාදන අංශ සඳහා සහකාර ගණකාධිකාරිවරයකු නව සේවක සංයුතිය තුළ අනුමත කර ඇති අතර එම අංශය ස්ථාපිත කළ පසු නියමිත පරිදි අභ්‍යන්තර පාලන ක්‍රම හඳුන්වා දී ඇත.

ඇ. වර්තමානය වන විට ඉඩම් පවරා ගැනීමේ කටයුතු සිදුකර ඇත.

ඈ. විගණන නිරීක්ෂන නිවැරදිය.

ඉ. මුදල් දුෂ්කරතා නිසා භාණ්ඩ මිලදී ගැනීම කිහිපවරකට කිරීමට සිදුවිය.

ඊ. ප්‍රසම්පාදන සැලැස්ම වාර්ෂිකව සකස් කරයි.

උ. එක් එක් ප්‍රසම්පාදන ක්‍රියාවලීන් සිදුවන අවස්ථාවේ එහි එක් එක් පියවරයන් වෙන් වෙන්ව වාර්තා කර ඇත.

3. අනෙකුත් විගණන නිරීක්ෂණ

3.1 කළමනාකරණ අකාර්යක්ෂමතා

අ. මෙම වත්කම පුද්ගලික රූපවාහිනී ආයතනයකට අයත් බැවින් වත්කමේ වටිනාකම තහවුරුකරගත නොහැක. එම රූපවාහිනී ආයතනය මේ සම්බන්ධ කිසිදු මැදිහත්වීමක් සිදුකර නැත.

ආ. සංස්ථාවේ තැටිපටි පුස්තකාලය දිගු කාලයක් තිස්සේ මෙම ස්ථානයේ පවත්වාගෙන ගොස් තිබූ අතර, ඒ සඳහා සුදුසු ස්ථානයක් සකස් කිරීම සඳහා සොයා බලමින් ඇත.

ඇ. විධිමත් පරිගණක දත්ත ගෙනුවක් සකස් කිරීමටත්, පැරණි ගීත සංරක්ෂණය කිරීමේදී බාහිර ස්ථානයක දත්ත ගබඩාවක් පවත්වාගෙන යාමටත් අවශ්‍ය පියවර ගන්නා ලෙස ඉංජිනේරු අංශය කටයුතු කරමින් ඇත.

ඈ. ශ්‍රී ලංකා රාජ්‍ය වැවිලි සංස්ථාව හා ශ්‍රී ලංකා ගුවන්විදුලි සංස්ථාව සමග සාකච්ඡා කර මෙම ගැටලුව නිරාකරණය කිරීම සඳහා කටයුතු කරමින් ඇත.

ඉ. රජරට සේවය දැනටමත් පවත්වාගන යනු ලබන ඉඩම අයිතිය නිරවුල් කරගැනීම සඳහා කටයුතු කරමින් ඇත.

ඊ. පරීක්ෂණ වාර්තා අනුව ඉදිරි කටයුතු කිරීම සඳහා නීති අංශය වෙත යොමුකර ඇත.

3.2 **නිෂ්ක්‍රීය / ඌන උපයෝජිත වත්කම්**

අ මහවැලි අධිකාරිය සතු මෙම වාහනය එම ආයතනයට භාරදී ඇත.

ආ අලුත්වැඩියා කර සංස්ථාව විසින් ප්‍රයෝජනයට ගැනීමට කටයුතු කළද නාගරික සංවර්ධන අධිකාරියේ දැනුම්දීම මත එම ගොඩනැගිල්ල කඩා ඉවත් කළ යුතු බවට දන්වා ඇත. මෙම කටයුතු තවමත් සාකච්ඡා මට්ටමේ ඇත.

3.3 **ලැබිය යුතු හා ගෙවිය යුතු ගිණුම්**

අ. විදුලි සංදේශ නියාමන කොමිසමට ගෙවිය යුතු මුදල් සඳහා සහනයක් ලබා ගැනීම අදාල අංශ සමග සාකච්ඡා කරමින් පවතී.

ආ මෙම ආදායම් අයකර ගැනීම සඳහා නීතිමය කටයුතු කරමින් ඇත.

ඇ. මේ වන විට සංස්ථා සේවකයින්ගෙන් අයකරගෙන ඇති අතර ඉතිරි ශේෂ සඳහා සංස්ථා මණ්ඩලයට යොමුකර ඉදිරි ක්‍රියාමාර්ග ගැනීමට නියමිතය.

ඈ. සැපයුම් අත්තිකාරම් 2019 වර්ෂයේ පියවා ඇත.

ඉ. මෙම මුදල අයකර ගැනීමට නොහැකි ඇතර, පොත්වලින් ඉවත් කිරීම සඳහා ඉදිරි ක්‍රියාමාර්ග ගනිමින් ඇත.

ඊ. ගිණුම් අනුව පවතින ශේෂ අයකර ගැනීමට සංස්ථාව කටයුතු කරන අතර ණයගැතියන් එකඟ නොවීමට ලිඛිත හේතු දක්වා තිබුණහොත් ඒ සම්බන්ධයෙන් සලකා බැලිය හැක.

උ. මේ වන විට ඌව ගුවන්විදුලියේ මුදල් අයකරගෙන ඇති අතර 2021-02-16 දින වන විට 5,104,984.04 අයවීමට ඇත.

3.4 **මූල්‍ය කළමනාකරණය**

2019 වර්ෂයේදී හඳුනාගත් හර ප්‍රේෂණ සහ බැර ප්‍රේෂණ නිවැරදි කර ඇත.

3.5

අ විගණන නිරීක්ෂණ නිවැරදි වේ.

ආ විගණන නිරීක්ෂණ නිවැරදි වේ.

ඇ විගණන නිරීක්ෂණ නිවැරදි වේ.

ඈ අයකර ගතයුතු ශේෂයක් ලෙස ගිණුම්වල පෙන්වා ඇත.

ඉ විගණන නිරීක්ෂණ නිවැරදි වේ.

3.6 **මානව සම්පත් කළමනාකරණය**

අ. සංස්ථාව විසින් බඳවා ගැනීම් පටිපාටිය සකස් කර අමාත්‍යාංශයේ නිර්දේශ සමග කළමනාකරණ සේවා දෙපාර්තමේන්තුවේ අනුමතියට ඉදිරිපත් කර ඇත.

ආ. අත්‍යවශ්‍ය තනතුරු සඳහා පමණක් සේවා අශ්‍යතාවය මත බඳවා ගැනීම් කර ඇත.

.....

සභාපති

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குக் கூற்று 2018

2018 ஜனவரி 01 தொடக்கம் 2018 டிசம்பர் 31 வரை

கௌரவ வெகுஜன ஊடக அமைச்சர்
வெகுஜன ஊடக அமைச்சு
கொழும்பு

கௌரவ அமைச்சர் அவர்களே!

1971 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (1) பந்தியின் பிரகாரம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான,கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை பின்வரும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்கின்றேன்.

1. 2018 ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நிறைவேற்றிய பணிகள் பற்றிய நிர்வாக அறிக்கை.
2. 2018 ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான கணக்கீட்டு ஆண்டுக்கான கணக்குகள் பற்றிய அறிக்கை.
3. 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.
4. 2018 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்காக கூட்டுத்தாபனம் முன் வைத்த கருத்துரை.

தங்கள் உண்மையுள்ள

தலைவர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

கொழும்பு-07

உள்ளடக்கம்

1.	நிர்வாக அறிக்கை.	01 - 12
2.	வருடாந்த கணக்கக் கூற்று.	13 - 40
3.	நிதிக் கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.	41 - 56
4.	2018 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான கூட்டுத்தாபனத்தின் கருத்துரை.	57 - 64

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

நோக்கு

இலங்கையின் முதன்மை வானொலி தொடர்பாடலாளர் ஆதல்

பணி

நேயர்களின் வாழ்வில் பங்கெடுக்கும் பொருளாதார, சமூக, கலாசார, ஒழுக்க, கல்வி மற்றும் பொழுதுபோக்கு போன்ற பல்வேறு துறைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்குவதற்காக அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஒலிபரப்ப ஊடகத்துக்கு வழிகாட்டுதல்.

நோக்கங்கள்

1. உலகம் முழுவதும் பரந்துள்ள அரசியல் பொருளாதார ,சமூகவியல் சார்ந்த நிகழ்வுகள் பற்றிய தகவல்களை திரட்டி மக்களுக்கு பகிர்ந்தளித்தல்.
2. மக்கள் வாழும் சூழ்நிலைக்குள் சமூகத்தில் செயலாக்கமுள்ள மனிதனாக செயற்படுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குதல்.
3. சமூகத்தை நோக்காகக் கொண்டு பொது அறிவை ஊக்குவிக்க நிதியம் ஒன்றை உருவாக்குதல்.
4. மனிதனின் நிலையான வாழ்வுக்கு அவசியமான சவால்களை அடையாளம் கண்டு அதற்கு தேவையான அறிவினை வழங்குதல்.
5. சமூகத்தில் விரைவான மற்றும் இறுதியான நோக்கங்களை விருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
6. அறிவு,மனப்பாங்கு,திறன்கள் ஆகியவை நிறைந்த சுய ஊக்கமுள்ள ஊழியர் குழாத்தினை உருவாக்கத் தேவையான பயிற்சியளித்தல்.
7. தயாரிப்பு மற்றும் ஒலிபரப்பு தொழில்நுட்பத்தை தகுந்தவாறு தயார்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேயர்களுக்கு தெளிவான ஒலிபரப்பு சேவையை வழங்குதல்.
8. ஒழுக்க நெறிக் கோவைக்கிணங்க அர்த்த புஷ்டியான ஒலிபரப்பு ஊடக கலாசாரத்தை உருவாக்குவதற்காக முன்னோடி நிறுவனமொன்றாக செயற்படுதல்.
9. தேசிய ஒலிபரப்பு வலையமைப்பு என்ற வகையில் அரசாங்கக் கொள்கைகளையும் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களையும் செயற்படுத்தல் தொடர்பாக மக்களை விழிப்படையச் செய்வதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குதல்.
10. சிறந்த நிதி நிர்வாகத்தையும் மனிதவள முகாமைத்துவத்தையும் பேணுதல்.
11. போட்டிகரச் சந்தையை உபாயத்திட்ட நடவடிக்கையின் மூலமாக வெற்றி கொள்ளல்.

நிர்வாக அறிக்கை - 2018

நிர்வாக அறிக்கை 2018

அறிமுகம்

1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 1967 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதியில் இருந்து செயல்படும் விதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

2018 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான 12 மாத காலப் பகுதியை இவவறிக்கை உள்ளடக்குகின்றது.

மீளாய்வுக்கு உட்படுகின்ற காலப்பகுதியினுள் கீழே காட்டப்படுகின்ற உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் சேவையாற்றினார்கள்.

2018 ஜனவரி மாதம் முதல் மே மாதம் 02 ஆம் திகதி வரை

திரு. சித்தி எம் பாரூக்	தலைவர் / கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு. தனுஷ்க ராமநாயக்க	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
சட்டத்தரணி சுதர்சன குணவர்தன	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு. எம். ஜே. ஆர். டேவிட்	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு .Bபி. கே. ஆர்.பாலசூரிய	திறைசேரியின் பிரதிநிதி

2018 மே மாதம் 14 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 02 ஆம் திகதி வரை

திரு. சித்தி எம் பாரூக்	தலைவர் / கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு. எம். ஜே. ஆர். டேவிட்	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திருமதி மஹேஷினி கொலொன்னே	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
சட்டத்தரணி நவீன் ஷாணக	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு. சமன் முதுகுமாரன	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு .Bபி. கே. ஆர்.பாலசூரிய	திறைசேரியின் பிரதிநிதி

2018 ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி முதல் டிசம்பர் 20 ஆம் திகதி வரை

பேராசிரியர் சோமரத்ன திசாநாயக்க	தலைவர் / கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு எச்.ஏ.எஸ்.குமாரசிங்ஹ	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு. அமரசிங்ஹ	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு. எச். எம். Bபி. பீ ஹேரத்	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு. போபகே நிமலவீர	கூட்டுத்தாபன சபை உறுப்பினர்
திரு. Bபி. கே. ஆர்.பாலசூரிய	திறைசேரியின் பிரதிநிதி

நிர்வாக அறிக்கை

இலங்கையில் விசாலமான ஒலிபரப்பு வலையமைப்பினை கொண்டிருக்கும் ஒரே ஒரு நிறுவனம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாகும். ஆசியாவின் ஒலிபரப்பின் முன்னோடியும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமே. பிராந்திய ஒலிபரப்பு நிலையங்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டிருக்கும் அரச ஒலிபரப்பு நிறுவனமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் திகழ்கிறது. கூட்டுத்தாபனம் திறமைசாலிகளை கொண்டிருக்கும் அதேவேளை மனிதவளத்துக்கும் உரித்துடையதாக திகழ்கிறது. தேசிய அடையாளத்தை பாதுகாத்து விசாலமான ஆற்றல்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கூட்டுத்தாபனம் செயற்படுகிறது.

கூட்டுத்தானத்தின் ஊழியர்கள் தொடர்ந்தும் பல்வேறு பட்ட விருதுகளை பெற்று சாதனைகளை படைத்துள்ளார்கள்.

2018 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து ஒலிபரப்பு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக விருதுகளை வென்ற பயனாளிகள் சம்பந்தமான விளக்கங்கள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன.

திரு. சுஜீவ ஹரிஸ்சந்ர	சிறந்த செய்தி வாசிப்பாளர் - ஆண் (சிங்களம்) அரச வானொலி விருது
திருமதி சித்ரா குமாரி களுபோவில	சிறந்த செய்தி வாசிப்பாளா - பெண் (சிங்களம்) அரச வானொலி விருது
திரு. எம். எஸ். எம். பெரோஸ்	சிறந்த செய்தி வாசிப்பாளர் - ஆண் (தமிழ்) ஜனாதிபதி விருது
திருமதி. அனுஷா மொறாயஸ்	சிறந்த சிறுவர் நிகழ்ச்சி (தமிழ்)

சிங்கள தேசிய சேவை

இலங்கை ஒலிபரப்பு சேவை வரலாற்றின் இதய அடையாளமாக கருதப்படுகின்ற சிங்கள தேசிய சேவையானது ஒலிபரப்பின் தொடக்கத்தில் இருந்து தனது அடையாளத்தை பாதுகாத்துக் கொண்டு ஒழுக்கம் நிறைந்த ஊடக மரபினை தேசத்திற்கு கொடையாக அளிக்கின்ற பொது நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டில் தனது நிகழ்ச்சிகளை ஒழுங்காக ஒலிபரப்பி வந்தது.

கல்வி மற்றும் சிறுவர் நிகழ்ச்சிகளுக்காக தேசிய சேவையின் ஒலிபரப்பு நேரத்தில் குறிப்பிட்ட அளவினை 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கிக் கொடுத்ததனை குறிப்பிடலாம்.

இதற்கு மேலதிகமாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கலாசார, அரசியல்,சமூகவியல் பற்றிய மற்றும் நிகழ்ச்சிகளுக்கு தேசிய சேவை நேரங்கள் நேயர்களுக்காக ஒதுக்கப்பட்டன. சுதந்திர தினம், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு நிகழ்ச்சிகள் மற்றும் வெசாக் பண்டிகை, தொழிலாளர் தினம், பொசொன் உற்சவம், நத்தார் வைபவங்களுக்காக விசேட கவனம் செலுத்தப்பட்டது. புதிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு செய்யப்பட்டமை விசேட அம்சமாகும்.

அழகியற் கலையினை ரசிக்கும் நோக்குடன் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் 2018 ஆம் ஆண்டு ஒலிபரப்பு செய்யப்பட்டன. "கீஹர சரணிய, ரூபன, ரன் கீ சர, உள்பத் அசல, விஸ்வமடு ஆகிய நிகழ்ச்சிகளை தொடர்ந்தும் ஒலிபரப்பு செய்வதில் நேயர்களின் ரசனையை நோக்கமாகக் கொண்டு தமது ஒலிபரப்பு நேரத்தில் குறிப்பிடத்தக்க அளவு ஒதுக்கப்பட்டது. விசேடமாக நாடக நிகழ்ச்சிகளுக்காக நேயர்களின் உயர்ந்தபட்ச ரசனையை பேணும் அதேவேளை, வானொலி நடிகர்களின் குரல் தரத்தினையும் நல்ல முறையில் பேணி வர ஆவன செய்யப்பட்டுள்ளது.

நீர்பாசன தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் "வாரி மண்டபய" நிகழ்ச்சியையும், நச்சுத்தன்மையற்ற விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் "திரசார கொவிதெனக், சுரக்ஷித ஹெடக்" நிகழ்ச்சியையும் பெண்களின் சமூக, பொருளாதார, அரசியல் அறிவினை விரிவாக்கும் நோக்குடன் "காந்தா பிரபோதய" போன்ற நிகழ்ச்சிகள் இவற்றில் முக்கியமானவையாகும். கிழமையில் ஒவ்வொரு நாளும் இலங்கை பெண்களின் சமூகவியல், அரசியல், கலாசார அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் புத்திசாதுர்யமான சமூகமொன்றை உருவாக்கும் நோக்கோடு இத்தகைய நிகழ்ச்சிகள் 2018 ஆம் ஆண்டும் ஒலிபரப்பு செய்யப்பட்டன.

கல்விச்சேவை

2018 ஆம் ஆண்டிற்குள் சிங்கள தேசிய சேவையின் ஊடாக கல்விப்பொதுத் தராதர உயாதர பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு ஆங்கிலம், தொடர்பாடல், அரசியல் விஞ்ஞானம், உயிரியல் மற்றும் க.பொ.த சாதாரணதர பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு விஞ்ஞானம், சிங்கள மொழி, சரித்திரம், கணக்குப் பாடம், ஆங்கிலம் அதேவேளை அனைத்து புலமை பரிசில் பரீட்சை எழுதும மாணவர்களுக்கு தமிழ் கதைப்போம் போன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

தமிழ் தேசிய சேவையில் உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக ஆங்கிலம், தமிழ். உயிரியல், புவியியல் மற்றும் சாதாரண தர மாணவர்களுக்கு தமிழ், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் ஒலிபரப்பப்பட்டன.

இவற்றுக்கு புறம்பாக பிரசித்தமான பரீட்சைகளான சாதாரண தரம் உயர்தரம் புலமைபரிசில் ஆகிய பரீட்சைகளை இலக்காகக் கொண்டு சில துணை நிகழ்ச்சிகள் 2018 ஆம் வருடத்தின் ஆரம்பகாலங்களில் ஒலிபரப்பப்பட்டன. பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும் பரீட்சைகள் ஆணையாளர்கள் பங்குபற்றும் பொதுவான பிரச்சினைகள் சமபந்தமாக உரையாடல் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

சிங்கள வர்த்தக சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இந்த வர்த்தக சேவை 2018 ஆம் வருடத்தில் மக்களின் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையினை உறுதிப்படுத்தும் வகையில் சமகால விவகாரங்கள். களிப்பூட்டல் நிகழ்ச்சிகள், உரையாடல்கள், அழகியற் கலை சம்பந்தமான பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சிகள் மத்தியில் பாடல்களை ரசிக்க வைப்பதற்காக "தவசே பிபிதென கீதய", "ஒபே நமின் கீ", "கீத சம்பாவ நாவ" , "ஸ்வர வசந்தய ஆகிய சங்கீதம் தொடர்பான நிகழ்ச்சிகள் வர்த்தக சேவையில் பல்வேறுபட்ட நேயர்களின் ரசனைக்கேற்ப ஒலிபரப்பப்பட்டன. "சுவ அரண" என்ற வைத்திய சமபந்தமான நிகழ்ச்சியும் பிரதி கிழமை தோறும் ஒலிபரப்பப்பட்டது, சிங்கள திரைப்படங்கள் தொடர்பான கவனத்தை ஈர்ப்பதற்கு ரசிகர்கள் சார்பாக " சல ரூ சேயா" நிகழ்ச்சியில் கலைஞர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கி "நொமியன மினிசுன்" மற்றும் "சத்துட்டு கெதெல்ல" நிகழ்ச்சிகள், மற்றும் "சரசவி ரங்கமண்டல" என்ற பெயரில் நாடகங்கள் தொடர்பான நிகழ்ச்சியும் 2018 ஆம் வருடத்தில் ஒலிபரப்பப்பட்டது.

சிட்டி எப். எம் சேவை

தேசிய பொறுப்புடன் கூடிய சரியான மற்றும் விசேடமான தகவல்களை முன் வைப்பதோடு உயர் ரசனையுடன் கூடியதாக போட்டி அடிப்படையிலான சவால்களை வெற்றி கொண்டு பயனுள்ள மற்றும் பிரபலமான வாணிப அலைவரிசையாவதை நோக்காகக் கொண்டு 2018 ஆம் ஆண்டில் ஏராளமான நிகழ்ச்சிகளை நேயர்களுக்கு அளிப்பது சிட்டி எப்.எம் சேவை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது.

சுதந்திர தினம், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு, வெசாக் உற்சவம் பற்றிய விசேட நிகழ்ச்சிகளை ஒலிபரப்பு செய்தது.பாடசாலை மாணவர்களின் ரசனையை நிறைவு செய்யும் நோக்கோடு "மிஹிர மனரம்" என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்யப்பட்டது.இதற்காக ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் சென்று இந்த நிகழ்ச்சியில் மாணவர்களை பங்குபற்ற வைக்க ஊக்கமளிக்கப்பட்டு ரசிப்பு தன்மைமிக்க பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

2015 ஆம் ஆண்டில் இருந்து சிட்டி எப்.எம் சேவை இலங்கை வங்கியின் அனுசரணையில் "ஆராதன ஸ்வர தெஹன" நிகழ்ச்சியொன்றை செய்வதோடு விக்டர் ரத்நாயக்க, டி. எம் ஜயரத்ன, நீலா விக்ரமசிங்க, சுனில் எதிரிசிங்க ஆகிய முன்னணி பாடகர்களின் பங்களிப்பு இதில் இடம்பெற்றது. இலங்கை வங்கியின் தலைமையகத்தில் மற்றும் நெலும் பொக்குண மண்டபத்திலும் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

ரேடியோ ஸ்ரீலங்கா மற்றும் சிட்டி எப். எம் ஆகியன ஒன்றிணைந்து "கோல்டன் மெலடீஸ்" நிகழ்ச்சி டி. டி. குணசேன என்ற பிரபல வயலின் கலைஞரின் பங்களிப்போடு இந்த நிகழ்ச்சி இடமபெற்றது.

ஆர்கேட் வளாகத்தில் பிரபல பாடகர் கிளெரின் விஜேவர்தன நினைவாக "சிஹின லொவக்" சங்கீத நிகழ்ச்சி வெற்றிகரமாக இடம்பெற்றது.

அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக ஊடக பங்களிப்பினை சிட்டி எப். எம் சேவை மேற்கொண்டிருக்கிறது." என்டர் பிரைஸ் ஸ்ரீலங்கா" கண்காட்சி பூமியில் நேரடி ஒலிபரப்பு கலையகம ஒன்றினை உருவாக்கி நிகழ்ச்சிகளை செய்தது. சர்வதேச புத்தக கண்காட்சிக்கு இணைவாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கட்டட முன்றலில் நேரடி ஒலிபரப்பு ஒன்றும் இடம்பெற்றது.

தமிழ் தேசிய சேவை

தமிழ் மக்களின் கலாசார அடையாளங்களுக்கு அமைவாக சென்று அவர்கள் வாழ்க்கையில் தாக்கம் ஏற்படுத்துகின்ற சமூக பொருளாதார அரசியல கல்வி மற்றும் ரசனை சார்ந்த நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல் 2018 ஆம் ஆண்டில் தமிழ் தேசிய சேவையினூடாக மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை தைப்பொங்கல் தினம் சரஸ்வதி பூஜை போன்ற கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டதோடு அவற்றுடன் தொடர்புடைய பல்வேறு பல்சுவை நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டன. இந்து சமயத்தையும் ஏனைய சமயங்களையும் கடைப்பிடிக்கின்ற தமிழ் மக்களை இலக்காகக் கொண்டு விசேட சமய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

இதேவேளை சர்வதேச மற்றும் தேசிய முக்கியத்துவம் கொண்ட தினங்கள் பற்றிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பு செய்வதோடு ரட்டவட்டா அவுருது, மேதினக்கொண்டாட்டம், சுதந்திர தினத்தை நினைவு கூறுதல், மதுபோதைக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட நிகழ்ச்சிகள் உலக சிறுவர்தின நிகழ்ச்சிகள் மற்றும் மகளிர் தின நிகழ்ச்சிகள் எல்லாம் 2018 ஆம் ஆண்டில் ஒலிபரப்பப்பட்டன.

தென்றல் எப்.எம் சேவை

இளம் சமுதாயத்தை இலக்காகக் கொண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ள தமிழ் மொழி மூலமான களிப்பூட்டல் அலைவரிசையாக அமைவது தென்றல் ஆகும். 2018 ஆம் ஆண்டு தென்றல் சேவையின் அடையாளத்தை பாதுகாத்துக்கொண்டு பல்வேறு தேசிய சமய சமூக முக்கியத்துவம் வாய்ந்த தினங்களில் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி இருக்கிறது. சிங்கள தமிழ் புதுவருட தினம், ரமழான் பெருநாள்,ஹஜ் பெருநாள்,சுதந்திர தினம், மகளிர் தினம்,சிறுவர் தினம் போன்றவற்றுக்காக சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.இவற்றுக்கு மேலதிகமாக நல்லூர் திருவிழா காலத்தில் களநிலை பற்றிய விபர அறிக்கைகளை தென்றல் வழங்கியது.

தமிழ் பேசும் நேயர்களின் அறிவு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் தென்றல் வழங்குகிறது.

கிறிஸ்தவ சமய முக்கியத்துவம் வாய்ந்த தலவில,மடுமாதா திருத்தலங்களில் இடம்பெறுகின்ற நிகழ்ச்சிகளின் களநிலவரங்களை ஒலிபரப்பு செய்தது.

முஸ்லிம் சேவை

ஏறக்குறைய 68 வருட வரலாற்றினைக் கொண்ட இலங்கையில் வாழும் முஸ்லிம் சமுதாயத்திற்கான கலாசார, சமய மற்றும் பண்பாட்டு அடிப்படையைக் கொண்டு ஒலிபரப்பாகின்ற ஒரேயொரு வானொலி அலைவரிசை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையாகும். இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தினரைப் போன்றே தென்னிந்திய தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

இணையத்தினூடாக உலகளாவிய ரீதியில் உள்ள முஸ்லிம்களும் செவியேற்கின்ற நிகழ்ச்சிகளில் ஏறக்குறைய 85% வீதமானவை அனுசரணையாளர்களின் பங்களிப்புடன் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளாகும். இனக்குழுவொன்றை அடிப்படையாகக் கொண்டு ஒலிபரப்பாகின்ற சேவையாக இருந்தாலும், முஸ்லிம் சேவையானது எல்லா வேளைகளிலும் இனங்களுக்கிடையில் சக வாழ்வினையும், ஒற்றுமையினையும் விருத்தி செய்வதை பிரதான நோக்கமாகக் கொண்டு நிகழ்ச்சிகளை தயாரித்து ஒலிபரப்பி வருகின்றது.

2018 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப வரலாற்றிலேயே முஸ்லிம் சேவை அதிகூடிய வருமானத்தைப் பெற்றுக் கொடுத்த ஒரு வருடமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

சமய நிகழ்ச்சிகளுடன் சிறுவர் மற்றும் மகளிர் நிகழ்ச்சிகள், இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள், மலாய் மற்றும் உருது மொழி பேசும் மக்களுக்கான நிகழ்ச்சிகள், றமழான் காலங்களில் மாதம் முழுதும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின. சிங்கள தேசிய சேவையூடாக பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 1.30க்கு சிங்கள மொழியில் "இல்முல் இஸ்லாம்" மற்றும் பிரதி சனிக்கிழமைகளில் பிற்பகல் 1.10க்கு "முஸ்லிம் காந்தா" என்ற நிகழ்ச்சியும் ஒலிபரப்பாகி வருகிறது.

ஆங்கில சேவை

நீண்ட காலம் தொட்டு விசேட ரசனையுடன் நேயர்களை கவர்ந்திழுக்க தக்க வகையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில சேவை "ரேடியோ ஸ்ரீலங்கா" இதற்கென பெரிய நேயர் கூட்டமொன்று அபிமானத்துடன் சுற்றியிருக்கிறது. 2018 ஆம் ஆண்டில் கலாசார, சமய, பொதுஜன மற்றும் களிப்பூட்டல் நிகழ்ச்சிகளை ரேடியோ ஸ்ரீலங்கா வழங்கியுள்ளது. சமகால நிகழ்வுகளையும் இது தொடர்ந்து வழங்குகிறது. தேசிய மற்றும் சர்வதேச பெறுமதிமிக்க விசேட தினங்களில் 2018 ஆண்டில் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பழைய ஆங்கில பாடல்களை கேட்பதற்கு பாரிய அளவிலான ரசிகர் கூட்டமொன்று ரேடியோ ஸ்ரீலங்காவை அபிமானத்துடன் கேட்கிறது. இலங்கை வானொலியின் ஆங்கில செவைக்கென புறம்பாக இருக்கும் இசைத்தட்டு களஞ்சியத்திலுள்ள பழைய ஆங்கில பாடல்களை தொகுத்து வழங்கி பழம்பெரும் ஆங்கில ரசிகர்களை 2018 ஆம் ஆண்டிலும் இலங்கை வானொலி திருப்தி அடைய வைத்துள்ளது.

2018 ஆம் ஆண்டில் ரேடியோ ஸ்ரீலங்கா மற்றும் சிட்டி எப்.எம் சேவைகள் ஒன்றிணைந்து "கோல்டன் மெலடீஸ்" நிகழ்ச்சி,டி.டி குணசேன என்ற பிரபல வயலின் வாத்திய கலைஞரின் பங்களிப்புடன் ஒலிபரப்பப்பட்டது. "ஸ்போட்ஸ் ரவுண்ட் அப்" என்ற பெயரில் நிகழ்ச்சி 2018 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு இலங்கையின் பல பாகங்களில் இடம்பெறும் விளையாட்டு போட்டிகளை இந்த நிகழ்ச்சியின் ஊடாக நேரடி ஒலிபரப்பு செய்யப்பட்டது

ரஜரட்ட சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முதலாவது பிராந்திய ஒலிபரப்பு இதுவாகும். இலங்கையின் கலையுலகத்துக்கு பாடல்கள், நாட்டியம் போன்ற துறைகளில் ஏராளமான கலைஞர்களை உருவாக்கி வழங்கிய சிறப்பைக் கொண்டது ரஜரட்ட சேவை. 2018 ஆம் ஆண்டு ரஜரட்ட சேவை தன்னை சுற்றியுள்ள பரதேசங்களை மேம்படுத்தும் முகமாக பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கியிருக்கிறது. ரஜரட்ட சேவை மூலம் ஊடக பயிற்சி பாடசாலை ஒன்று 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

அநேகமான நாட்களில் சமய நிகழ்ச்சிகள் கூட ஒலிபரப்பப்படுகின்றது. சிங்கள தமிழ் புதுவருட நிகழ்ச்சிகள் சுதந்திர தின நிகழ்ச்சி, வெசாக், பொசொன் நிகழ்ச்சிகள், நந்தார் நிகழ்ச்சி என்பன 2018 ஆம் ஆண்டில் ஒலிபரப்பப்பட்டன. இவற்றோடு தொழிலாளர் தினம், மதுபானத்திற்கெதிரான நிகழ்ச்சிகள் மகளிர் தின நிகழ்ச்சிகள்,உலக சிறுவர் தின நிகழ்ச்சிகள் போன்றவை ஒலிபரப்பப்பட்டன.

சிறுநீரக நோய் நிவாரண விசேட நிகழ்ச்சி விவசாய நிகழச்சிகள் ஒலிபரப்பில் இணைக்கப்பட்டதோடு ரஜரட்ட சேவை ஆரம்பிக்கப்பட்டு 39 வருடங்கள் நிறைவடைவதனை முன்னிட்டு அனுராதபுரம் பண்டுரங்க எனும் விசேட சங்கீத நிகழ்ச்சி ஒன்று ஒலிபரப்பப்படடது.

வயம்ப ஹண்ட

வயம்ப (வடமேல் மாகாண) பிரதேசத்தை பேணி நடத்தப்பட்டு வரும் பிராந்திய ஒலிபரப்பு அலைவரிசையே வயம்ப ஹண்ட. 2018 ஆம் ஆண்டு பிரதேச மற்றும் தேசிய அடிப்படையில் இடம்பெறும் விசேட அம்சங்களை அந்த பிரதேச மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதெ நோக்கமாகம். இந்த அடிப்படையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சவிசெட தினங்கள் மற்றும் சமய உற்சவங்கள் சம்பந்தமான பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டதோடு இருதய நோய் மற்றும் சிறுநீரக நோய் பற்றி மக்களை அறிவூட்டுவதற்காக நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. சுற்றாடல் வாரம், புகைபிடித்தலுக்கு எதிரான தினம் போன்றவற்றை ஞாபமூட்டி நிகழ்ச்சிகள் செய்யப்பட்டன. பல்வேறுபட்ட கலைஞர்கள் பற்றிய நிகழ்ச்சிகள் இயற்கையை வர்ணிக்கும் பாடல்கள் சுபாவித (கலைஞர்களை அறிமுகம் செய்தல்) நிகழ்ச்சி, கல்வி நிகழ்ச்சிகள் ஆகியன 2018 ஆம் ஆண்டில் ஒலிபரப்பு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டு வயம்ப ஹண்ட தனது 9 ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆசிர்வாத நிகழ்ச்சிகள் வாழ்த்து நிகழ்ச்சிகள் மற்றும் பாடல் நிகழ்ச்சிகள் என்பன ஒலிபரப்பப்பட்டன.

ரேடியோ தம்பான

ரேடியோ தம்பான இலங்கையில் ஆதிவாசிகளின் அடையாளத்தையும் அவர்களது கலாசார உரிமைகளையும் பாதுகாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதாகும்.இந்த ஒலிபரப்பின் ஊடே வணிக நோக்கோடு செயற்படும் ஒரு அலைவரிசையாகவும் இது இருக்கிறது.அடிப்படையில் பார்க்கும் பொழுது வேடுவர்களின் மொழி ஆதிவாசிகளின் கலை அம்சங்கள் கலாசாரம் ஆகியன பேணி பாதுகாப்பதும் இதன் நோக்கமாகும். ரேடியோ தம்பானயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2018 ஆம் ஆண்டு இவற்றோடு தொடர்புடைய பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பிறை எப். எம்

அக்கரைப்பற்று பிராந்திய வானொலிச்சேவை பிறை எப்.எம் என அழைக்கப்படுகிறது.2018 ஆம் ஆண்டு அனுசரணையாளர்கள் பலரின் விளம்பர நிகழ்ச்சிகள் மூலம் கூட்டுத்தாபனத்துக்கு வருமானத்தை ஈட்டி தருவதற்கு பிறை எப்.எம் காரணமாக அமைந்துள்ளது. அந்த பிராந்தியத்திற்கு பயன்படும் வகையில் பயனுள்ள நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. தேசிய மற்றும்

சர்வதேச பெறுமதி கொண்ட பல நிகழச்சிகளும் இங்கு ஒலிபரப்பப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக சமய விழாக்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்படடன.

முஸ்லிம் மக்கள் பெரும்பாலும் வாழும் அக்கரைப்பற்று பிரதேசம் மற்றும் தமிழ் மொழியினை தாய்மொழியாகக் கொண்டு கதைககும் கிழககு பிராந்திய மக்கள் வசிக்கும் இப்பிரதேசத்தில் இவர்களின் வரவேற்பினை பெற்று திகழ்வதற்கு பொருத்தமான பல நிகழ்ச்சிகளை 2018 ஆம் ஆண்டு பிறை எப்.எம் ஒலிபரப்பியது.

செய்தி மற்றும் நடப்பு விவகார பிரிவு

இந்தப்பிரிவின் பிரதான கடமையாக இருப்பது உண்மையான செய்திகளை பொறுப்புணர்வுடனும் நம்பிகையாகவும் மக்களுக்கு வழங்குவதாகும். 2018 ஆம் ஆண்டு நான்கு மொழிகளிலும் செயதிகள் ஒலிபரப்பப்பட்டன. நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு செய்திகள் ஒலிபரப்பப்படுகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக மணிச்செய்திகள், தினக்குறிப்பேடு மற்றும் சிறுவர் செய்திகள் ஆகியன வெளியிடுதல் செய்திப்பிரிவின் கடமைகளில் உள்ளடங்கியிருக்கின்றன ‘‘சுபாரதி’’, ‘‘எத்துல் பெத்த’’ ‘‘சத்தியேக்ஷனய ஆகிய நிகழ்ச்சிகள் சமூகத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு ஈடாக பேசுகின்றன.அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வது அரசாங்கம் நடத்தும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றி மக்களின் வித்தியாசமான கருத்துக்களுக்கு தெளிவான விளக்கத்தை வழங்கி அவர்களை சரியான வழிக்கு அழைத்துச் செல்லும நோக்கோடு இந்நிகழ்ச்சிகள் செய்யப்படுகின்றன.2018 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வுகளை நேரடி ஒலிபரப்பு செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

அபிவிருத்தி பிரிவு

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2018.01.01 இல் இருந்து 2018 12.31 ஆம் திகதி வரை பங்குபற்றிய பல்வேறு வைபவங்களுக்கான ஊடக தொகுப்பினை வழங்கும் பணிகள் அபிவிருத்தி பிரிவு மூலமாக 2018 இலும் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி வைபவங்களில் ஜனாதிபதி அவர்கள் ஆற்றிய உரைகளை பேணி பாதுகாத்தலும் அபிவிருத்தி கூறின் பணியாகும்.இந்த வைபவங்கள் தொடர்பான முன்கூட்டிய பிரசார பணிகளும் அபிவிருத்தி சுறு மூலமாக மேறகொள்ளப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகளில் அவர் ஆற்றிய உரைகளை எடுத்து வானொலியில் பிரசாரம் செய்யும் பொறுப்பும் அபிவிருத்தி பிரிவின் கடமையாக இருந்தது. அதேபோன்று பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க பங்குபற்றும் உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்வதும்,இது தொடர்பான நிகழ்ச்சிகளை ஒலிபரப்பு செய்வதும் அபிவிருத்தி பிரிவின் கடமையாக இருந்தது.

இசைப்பிரிவு (மெல்லிசை)

2018 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அனைத்து பிரிவுகளிலும் மெல்லிசை மூலமான பாடல்களை தயாரித்து வழங்கும் பொறுப்பு சங்கீத பிரிவைச் சேர்ந்ததாகும். விமர்சனம் சார்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றையும் ஒலிபரப்பி கூட்டுத்தாபனத்திற்கு நல்ல பெயரை பெற்றுக் கொடுத்தது. 2018 ஆம் ஆண்டில் சங்கீத பிரிவு தயாரித்து வழங்கிய ‘‘லலின கலாலய என்ற கல்வி நிகழ்ச்சி,இரிதா சங்கிரஹய’’ போன்ற நிகழ்ச்சிகளும் ‘‘ஜனகீ’’ ‘‘விரிது’’ போன்ற நிகழ்ச்சிகள் ‘‘சரச ராவய’’ என்ற சாஸ்திரிய சங்கீத நிகழ்ச்சி, ஜனகீ என்ற பெயரில் உருவாக்கப்பட்ட ஹெலகீ சித்தம் நிகழ்ச்சி. ‘‘பக் மீ மல்ரோம்’’ வருடாந்த புத்தாண்டு விசேட நிகழ்ச்சி, புத்தாண்டு பாடல் உள்ளடங்கிய பக் மஹே அசிலிய நிகழ்ச்சி, ஆவர்ஜனா நினைவேந்தல் நிகழ்ச்சி போன்றவற்றையும் இசைப்பிரிவு தயாரித்து வழங்கியுள்ளது.

வெளியீடுகள் பிரிவு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடுகள் சம்பந்தமாக செயற்படுகின்ற வெளியீடுகள் பிரிவானது இறுவட்டுக்கள், சஞ்சிகைகள் என்பவற்றை தயாரித்து வருமானம் ஈட்டுகின்றது. 2018 ஆம் ஆண்டிலும் விசேடமான விற்பனை வருமானத்தையும் ஈட்டியுள்ளது. ''நெலும் வில மமய்'', ''கீ அனுவாதன'' ''மல்பர ஹிமிதிரியே - 2'' ''சுப பிரார்தனா - 2''

''தஹம் பாசல் கீதய'' ஆகிய புதிய நிர்மாணங்கள் இறுவட்டுக்களில் உற்பத்தி செய்து விற்பனைக்கு விடப்பட்டன.இதற்கு மேலதிகமாக புதிய விற்பனை முகவர் நியமிக்கப்பட்டு இலங்கை வெளியீட்டுப் பிரிவின் சந்தைப்படுத்தல் விரிவாக்கப்பட்டது. இது 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும்.

நேயர் ஆய்வுப்பிரிவு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவைகயில் நிகழ்ச்சிகளின்

தன்மை கேட்கும் தராதரம் மற்றும் நேயர்களின் நிலை ஆகியன சம்பந்தமாக ஆய்வுகளை செய்வது இவை தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது என்பன நேயர் ஆய்வுப்பிரிவின் கடமைகளாகும்.இதனடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் தேசிய சேவைகளில் ஒலிபரப்பான நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நேயர் திருப்தியினை அறிந்து கொள்ளல் தேசிய சேவையின் நேயர் தராதரம் சமபந்தமாக மக்களின் பிரதிபலிப்பு தேசிய சேவைகளின் நிகழ்ச்சிகள் பற்றிய நேயர்களின் பிரதிபலிப்பு ஆகியனவற்றை ஆய்வு செய்யப்பட்டன.தினந்தோறும் பெறுமதி வாய்ந்த தகவல்களை வழங்குதல் கல்விசார் தேவைகளுக்காக விவரங்களை திரட்டி மாணவர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் தேவையான தகவல்களை வழங்குதல். இலங்கை வானொலி அருங்காட்சியகத்துக்கு தேவையான தகவல்கள் மற்றும் புகைப்படங்களை வழங்குதல். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சம்பந்தமாக கையேடுகளை பேணுதல் என்பன 2018 ஆம் ஆண்டு நேயர் ஆய்வுப்பிரிவு செய்து வந்தது.

மத்திய செயற்பாட்டுப் பிரிவு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கலையகங்களை முகாமைத்துவம் செய்வது மற்றும் ஒலிப்பதிவு செய்வது தொடர்பாக செயற்பாடுகளை மேற்கொள்வதும் மத்திய செயற்பாட்டு பிரிவின் கடமையாகும். கூட்டுத்தாபனத்தின் நேரடி ஒலிபரப்பு கலையகம் மற்றும் ஒலிப்பதிவு கலையகங்களுக்கு தேவையான தொழில்நுட்பவியலாளர்களை கடமையில் அமர்த்தல். மற்றும் கலையகத்துக்கு தேவையானவற்றை வழங்குதல் இந்தப்பிரிவின் கடமையாகும்.கலையகங்களை பேணி பாதுகாப்பதும் இந்த பிரிவின் கடமைகளில் ஒன்றாகும்.2018 ஆம் ஆண்டில்

நேயர்கள் நிகழ்ச்சிகளை எதுவித தடங்கல்களும் இல்லாமல் கேட்பதற்கு ஏற்ற வகையில் கூட்டுத்தாபனத்துக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவது மத்திய செயற்பாட்டு பிரிவாகும்.

பயிற்சி நிறுவகம்

ஒலிபரப்பு ஊடகத்துக்கு தேவையான பல்வேறுபட்ட பயிற்சி தேவைகளை வழங்குதல் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்குதல் என்பன இந்தப் பிரிவின் கடமையாகும். 2018 ஆம் ஆண்டில் பயிற்சி தேவைகள் பூரணமாக நிறைவேற்றப்பட்டதோடு கூட்டுத்தாபனத்தின் வருமானத்திற்கும் இந்த நிலையம் ஒத்துழைப்பு வழங்குகிறது. வானொலி தாயரிப்பு மற்றும் தொடர்பாடல் நற்சான்றுப்பத்திர வகுப்பு ஒலிபரப்பு சம்பந்தமாக நடத்தப்படுகிறது. பல்வேறுப்பட்ட நிகழ்ச்சி தயாரிப்பாளர்களையும், ஊடகவியலாளர்களையும் உருவாக்குவதற்கு இந்த நிறுவனம் தன்னாலான முழு பங்களிப்பையும் வழங்கி வருகிறது.2018 ஆம்ஆண்டு ஒலி முகாமைத்துவம்

சம்பந்தமான நற்சான்றுப்பத்திர வகுப்புகளை வெற்றிகரமாக நடத்தி கூட்டுத்தாபனத்திற்கு வருமானத்தையும் ஈட்டிக்கொடுத்தது.

பொறியிலாளர் பிரிவு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பொறியிலாளர் பிரிவு மூலமாக 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கடமைகள்.

- ✓ தொடர்கலையகம் C1- C12 கலையகங்களை மறுசீரமைக்கும் இரண்டாவது கட்ட பணிகள் செய்யப்பட்டன. இந்த திட்டத்தின மொத்த பெறுமதி மூன்று கோடி இருபத்தெட்டு இலட்ச ரூபாய்கள்.
- ✓ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகள் மேம்படுத்தல் திட்டத்துக்காக நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் பெறுமதி நான்கு கோடி அறுபது இலட்ச ரூபாய்கள்.
- ✓ கொழும்பு மற்றும் யட்டியந்தோட்டை ஒலிபரப்பி நிலையங்களுக்கு 06 ஓடியோ புரோசர்கள் பெறப்பட்டது.இதற்கு செலவளித்த பெறுமதி எழுபத்தெட்டு இலட்சத்து பத்தாயிரம்.

சந்தைப்படுத்தல்

2018 ஆம் ஆண்டு ஒலிபரப்பு நேர விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை குறிப்பிட்ட அளவு அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு அதன் விளைவாக குறிப்பிடத்தக்க அளவு வருமானம் அதிகரித்துக் காணப்பட்டது. சிங்களம் தமிழ் புத்தாண்டு விழா மற்றும் ரமசான் பெருநாள் காலங்களில் ஒலிபரப்பு நேர விற்பனை வருமானம் திருப்தி அடையக் கூடிய வகையில்அதிகரித்துக் காணப்பட்டது. இந்தியா, பங்களாதேஷ், இலங்கை முக்கோண கிரிக்கெட் போட்டிகள், ஆசிய விளையாட்டு நேரடி வர்ணனைகள் ஆகியன 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்றன. இதன் மூலம் திருப்திகரமான வருமானம் கிடைக்கப்பெற்றது. டிசமபர் மாதத்தில் கிறிஸ்மஸ் பிரமோ என்ற பெயரிலான நிகழ்ச்சிகள் சிட்டி எப்.எம் அலைவரிசையினூடாக இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சிகள் மூலம் கிடைத்த வருமானம் திருப்திகரமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

கணக்குக் கூற்று - 2018

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

நிதி நிலைமைக் கூற்று

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாய்களில் உள்ளன)

	குறிப்பு	2018 டிசம்பர் 31	2017 டிசம்பர் 31
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்கள்	**9**	2,311,208,561	2,295,092,896.53
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	**8**	8,970,648	6,536,768.00
மென்பொருள்	**9**	2,977,263	1,251,062.50
மூலதன நடைமுறை வேலை	**10**	21,389,180	54,762,027.60
நிலையான வைப்புக்கள்		69,818,185	63,368,597.00
முதலீடு	**11**	1,000,000	1,000,000.00
		2,415,363,837	**2,422,011,352**
நடைமுறைச் சொத்துக்கள்			
சரக்கிருப்புகள்	**12**	47,118,087	121,140,038
வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகள்	**13**	250,881,963	246,852,564
காசு மற்றும் காசையொத்தவை	**14**	161,820,846	288,350,322
		459,820,896	**656,342,924**
மொத்த சொத்துக்கள்		**2,875,184,732**	**3,078,354,276**
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்			
மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்			
கூறப்பட்ட மூலதனம்		307,386,085	307,386,085
மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்		11,971,999	14,421,999
நிறுத்திவைத்த வருவாய்	**15**	(94,949,639)	(55,337,285)
		224,408,445	**266,470,799**
எதிர்பாராப் பொறுப்புக்கள்		11,783,507	
நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்			
வரையறுக்கப்பட்ட நன்மைக் கடமைப்பாடுகள்	**20**	197,804,973	227,277,118
வெளிநாட்டு மானியம்	**19**	1,064,823,598	1,207,904,228
அரச மானியம்		805,199,976	863,445,527
ஏனைய கொடுப்பனவுகள்	**18**	13,403,384	
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	**8**	109,840,670	79,401,520
		2,191,072,601	**2,378,028,393**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வரையறுக்கப்பட்ட நன்மைக் கடமைப்பாடுகள	**20**	2,517,832	
வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	**16**	322,917,574	291,738,905
நிதி அல்லாத பொறுப்புக்கள்	**17**	122,484,773	142,116,178
மொத்த பொறுப்புக்கள்		**447,920,179**	**433,855,084**
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்		**2,875,184,732**	**3,078,354,276**

நிதி அறிக்கைகள் இலங்கை நிதி அறிக்கையிடல் தராதரங்கள், 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்கநிதி சட்டம். 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டம், ஆகியவவற்றின் தேவைகளுக்கு இணங்க, தயாரிக்கப்பட்டுள்ளன என்று நிதிப் பணிப்பாளர் உறுதிப்படுத்துகின்றார்.

திரு. லலித் ஹெட்டிகே
நிதிப் பணிப்பாளர்

திகதி 14/5/19

இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதும் சமர்ப்பிப்பதும் பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும். இந்நிதிக் கூற்றுக்கள்

மாலக தலவத்தை
தலைவர்
திகதி: 21/05/19

பணிப்பாளர் சபை உறுப்பினர்
திகதி: 21/05/2019

பணிப்பாளர் சபை உறுப்பின
திகதி: 21/05/2019

இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனம்

விரிவான வருமானக் கூற்று

அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாய்களில் உள்ளன

	குறிப்பு	2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டு	2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டு
விற்பனைகள்	1	**658,781,373**	691,351,776
விற்பனைக் கிரயம்	2	**630,013,675**	625,237,705
மொத்த இலாபம்		**28,767,698**	**66,114,071**
ஏனைய செயற்பாட்டு வருமானம்	3	**329,501,974**	**325,491,937**
விநியோகச் செலவுகள்	4	**2,231,926**	**5,361,316**
ஏனைய செயற்பாட்டுச் செலவுகள்	5	**347,499,195**	**327,918,435**
நிருவாகச் செலவுகள்	6	**386,726,869**	**333,886,642**
செயற்பாட்டு இலாபம்		**(378,188,318)**	**(275,560,385)**
நிதிக் கிரயங்கள்	7	**1,939,271**	**5,952,776**
அரச மானியத்திற்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)		**(380,127,590)**	**(281,513,161)**
அரச மானியம்	3.1	**360,000,000**	**350,690,000**
அரச மானியத்திற்குப் பின்னரான இலாபம்/ (நட்டம்)		**(20,127,590)**	**69,176,839**
பிற்போடப்பட்ட வரி	8	**(28,005,270)**	**(3,172,636)**
ஏனைய விரிவான வருமானம்	19	**8,653,266**	
வரிக்குப் பின்னரான இலாபம்		**(39,479,594)**	**66,004,203**
மொத்த விரிவான வருமானம்		**(39,479,594)**	**66,004,203**

இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனம்

உரிமையாண்மை மாற்றக் கூற்று

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாய்களில் உள்ளன)

	கூறப்பட்ட மூலதனம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்		நிறுத்திவைத்த வருவாய்கள்	மொத்தம்
2017 சனவரி 1 ஆம் திகதி மீதி	307,386,085	14,421,999		-	321,808,084
விரிவான வருமானம்					
விரிவான வருமானம்				66,004,203	66,004,203
மூலதன ஒதுக்கம்					-
வருமான ஒதுக்கம்				(121,341,489)	(121,341,489)
2017 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி	**307,386,085**	**14,421,999**		**(55,337,285)**	**266,470,799**
மூலதன ஒதுக்கம்					-
விரிவான வருமானம்					
காலப்பகுதிக்கான விரிவான வருமானம்				(39,479,594)	(39,479,594)
வருமான ஒதுக்கம்		(2,450,000)		(132,760)	(2,582,760)
2018 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி	**307,386,085**	**11,971,999**		**(94,949,639)**	**224,408,445**

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

விவரம்	2018		2017	
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்				
வட்டி மற்றும் வரிக்கு முன்னரான தேறிய இலாபம்		(20,127,590)		74,556,031
சீராக்கங்கள்				
அரச மானியத்தின் கடன்தீர்ப்பனவு	(85,701,018)		(77,916,361)	
திருகோணமலை மானியத்தின் கடன்தீர்ப்பனவு	(155,406,674)		(155,406,674)	
தேய்மானம்	78,900,888		62,529,891	
தேய்மானம் - திருகோணமலை	159,846,172		159,297,421	
பணிக்கொடைக்கான ஒதுக்கம்	31,435,470		25,814,868	
அறவிட முடியாக் கடன் ஒதுக்கம்	2,231,926		5,361,316	
பரிமாற்ற ஆதாயம்/ (நட்டம்)	(803,628)		129,895	
பொருளாதாரச் சேவை விதிப்பனவு	3,769,850	34,272,984	3,398,792	23,209,146
		14,145,394		97,765,177
வருமான ஒதுக்கச் சீராக்கம்		(207,000)		(362,500)
செயற்படு மூலதனத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்				
சரக்கிருப்பில் அதிகரிப்பு/ குறைவு	(1,999,520)		(1,769,599)	
வட்டி மற்றும் ஏனைய பெறுவனவுகளில் அதிகரிப்பு/ குறைவு	(6,261,324)		(12,217,155)	
டிரான்ஸிட்டிலுள்ள அதிகரிப்பு/ குறைவு	(108,923)		(62,689,709)	
வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளில் அதிகரிப்பு/ குறைவு	56,365,560		8,487,821	
நிதி அல்லாத பொறுப்புக்களில் அதிகரிப்பு/ குறைவு	(20,429,685)	27,566,108	(30,038,536)	(98,227,178)
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(49,736,515)		(42,492,960)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		(8,232,013)		(43,317,461)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்				
நிலையான வைப்பு வட்டி	(6,449,589)			
அரச மானியம்	19,672,630		214,308,671	
ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(70,790,307)		(86,952,149)	
மூலதன நடைமுறை வேலை	(60,730,197)		(52,606,237)	
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு		(118,297,463)		74,750,285
தேறிய காசு மற்றும் காசையொத்தவைகளில் அதிகரிப்பு/ குறைவு		(126,529,476)		31,432,824
மீளாய்வாண்டில் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசையொத்தவைகள்		288,350,322		256,917,498
மீளாய்வாண்டில்இறுதியிலிருந்த காசு மற்றும் காசையொத்தவைகள்		**161,820,846**		288,350,322

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. பொது தகவல்கள்

1.1 அறிக்கையிடல் நிறுவனம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டு நிறுவப்பட்டது, அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 07 இன் சுதந்திர சதுக்கத்தில் உள்ளதுடன் வணிகத்தின் முக்கிய இடமும் கொழும்பு 07 இன் சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ளது.

1.2 முதன்மை செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

மீளாய்வாண்டின் போது, கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயல்பாடு ஒலிபரப்பு விற்பனை ஆகும்.

1.3 வெளியீட்டுக்கான அங்கீகார திகதி

2018 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிநிலை அறிக்கைகள் ஒப்புதலுக்காக 2019.05.14 ஆம் திகதி வழங்கப்பட்டன

1.4 ஊழியர்களின் எண்ணிக்கை

இந்த ஆண்டின் இறுதியில் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 752 ஆகும்

மேலும் ஆண்டின் இறுதியில் ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை 95 ஆகும்

(31.12.2017 - 888)

2. இலங்கை நிதி அறிக்கையில் தராதரங்களை (“எஸ்.எல்.எ.ஃ.ப்.ஆர்.எஸ்”) தயாரித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தர நிர்ணயச் சட்டத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களின்படி (“எஸ்.எல்.எ.ஃ.ப்.ஆர்.எஸ்”) படி கூட்டுதாபனம் தனது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கிறது.

இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் இலங்கை கணக்கியல் தராதரங்களின் (“எஸ்.எல்.எ.ஃ.ப்.ஆர்.எஸ்”) ஒரு புதிய தொகுதியை வெளியிட்டதுடன் நிறுவனங்கள் இந்த தரங்களை 2012 ஜனவரி 1 முதல் அல்லது அதற்குப் பிறகு நடைமுறைப்படுத்த வேண்டும்.

3. 1 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

இந்த நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால், இந்த கொள்கைகள் வழங்கப்பட்ட அனைத்து ஆண்டுகளுக்கும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன.

3.1.1 தயாரிப்பின் அடிப்படை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கை தரநிலைகளுக்கு (எஸ்.எல்.எ.ஃ.ப்.ஆர்.எஸ்) ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள

வரலாற்றுக் கிரயம் மற்றும் பிற குறிப்பிட்ட அளவீடுகளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன, அவை அடுத்தடுத்த குறிப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

நிதி அறிக்கைகளை பாதிக்கும் பணவீக்க காரணிகளில் எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை.

எஸ்.எல்.எ.ஃ.ப்.ஆர்.எஸ் உடன் இணக்கமாக நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு முக்கியமான கணக்கியல் மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டும். கூட்டுத்தாபனத்தின் கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்துவதற்கான செயல்பாட்டில் நிர்வாகம் தனது தீர்ப்பைப் பயன்படுத்த வேண்டும். நிதிக் கூற்றுக்களுக்கு அனுமானங்களும் மதிப்பீடுகளும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் குறிப்பு 4 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களின் தேதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் தொடர்ச்சியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்துதல் மற்றும் வருவாய் மற்றும் செலவுகளின் அளவு அறிக்கை அறிக்கை காலம என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகள் தற்போதைய நிகழ்வுகள் மற்றும் செயல்களைப் பற்றிய நிர்வாகத்தின் சிறந்த அறிவை அடிப்படையாகக் கொண்டவை என்றாலும், உண்மையான முடிவுகள் இறுதியில் அந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

3.1.2 தொடர்ந்து செல்லல்

பணிப்பாளர்கள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து செல்லும் இயலுமை பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டதுடன் அவர்கள் நிறுவனத்தைக் கலைக்கவோ வியாபாரத்தை நிறுத்தவோ உத்தேசிக்கவில்லை.

3.1.3 ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்

இருப்புநிலை தேதிக்குப் பிறகு நிகழும் அனைத்து முக்கிய நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு, நிதிநிலை அறிக்கைகளில் தேவையான மாற்றங்கள மேற்கொள்ளப்பட்டு / அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3.1.4 ஒப்பீட்டு தகவல்

கூட்டுத்தாபனத்தால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகள், வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால், முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்துப்போகின்றன. சமர்ப்பித்தலை உறுதிப்படுத்த முந்தைய ஆண்டின் புள்ளிவிவரங்கள் மற்றும் கட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

3.1.5 வெளிநாட்டு நாணயங்கள்

(அ) செயல்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

கூட்டுத்தாபனத்தின் நிதக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள உருப்படிகள் நிறுவனம் செயல்படும் முதன்மை பொருளாதார சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகன்றன (”செயல்பாட்டு நாணயம்”). நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன, இது கூட்டுத்தாபனத்தின் செயல்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமாகும்.

(ஆ) வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகள் மற்றும் நிலுவைகள்

பரிவர்த்தனைகளின் தேதிகள் அல்லது மதிப்பீடுகள் மதிப்பிடப்பட்ட தேதிகளில் நிலவும் மாற்று விகிதங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகள் செயல்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன. அத்தகைய பரிவர்த்தனைகளின் தீர்வு மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாணய சொத்துக்கள் மற்றும் கடன்களின் ஆண்டு இறுதி பரிமாற்ற வீதங்களின் மாற்றத்தின் விளைவாக ஏற்படும் அந்நிய செலாவணி ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் வருமானக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

3.2 பிற குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

3.2.1 சொத்துக்கள் மற்றும் அடிப்படைகள் அவற்றின் மதிப்பீட்டில்

ஐந்தொகையில் தற்போதைய சொத்துகளாக வகைப்படுத்தப்பட்ட சொத்துகள் ரொக்கமாகவும், கூட்டுத்தாபனத்தின் வணிகத்தின் இயல்பான இயக்க சுழற்சியின் போது அல்லது இருப்புநிலை தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், எது குறைவாக இருந்தாலும் பணமாக உணரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடைமுறைச் சொத்துக்களைத் தவிர மற்ற சொத்துக்களை இருப்புநிலை தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அப்பால் வைத்திருக்க கூட்டுத்தாபனம் விரும்புகிறது.

3.2.1.1 பொறி, ஆலை மற்றும் உபகரணங்கள்

நிலம் மற்றும் கட்டிடங்கள் முக்கியமாக தலைமை அலுவலகம், பிராந்திய மற்றும் ஒலிபரப்பு நிலையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. அனைத்து சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் கூறப்பட்டுள்ளன. பொறி, ஆலை மற்றும் உபகரணங்களின் கிரயம் என்பது சொத்துக்களை அதன் பணி நிலைமைகளுக்கு கட்டுப்படுத்துவதில் ஏற்படும் எந்தவொரு தற்செயலான செலவினங்களுடனும் பயன்படுத்த விரும்பும் தேவைக்காக அதனைக் கொள்வனவு செய்வதற்கான கிரயம் ஆகும். சொத்துக்களை அதன் நிரந்தர தன்மையில் பெறுதல், விரிவாக்குதல் அல்லது மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான செலவினங்கள் மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன. அடுத்தடுத்த செலவுகள் சொத்தின் சுமந்து செல்லும் தொகையில் சேர்க்கப்படுதல் அல்லது சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்திற்குப் பாயும் மற்றும் பொருளின் விலையை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும் என்ற பட்சத்தில் மாத்திரம் ஒரு தனி சொத்தாக அங்கீகரிக்கப்படுவது பொருத்தமானதாகும்.

3.2.1.2 மறுசீரமைப்பு செலவுகள்

முதலில் மதிப்பிடப்பட்ட செயல்திறனில் இருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளை மீட்டெடுப்பதற்காக அல்லது பராமரிப்பதற்காக ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்களை பழுதுபார்ப்பது அல்லது பராமரிப்பதில் செலவு, ஏற்படும் போது ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகிறது.

3.2.1.3 தேய்மானம்

நிலம் தேய்மானம் செய்யப்படவில்லை. அனைத்து நிலையான சொத்துகளின் விலை / மதிப்பிடப்பட்ட அளவுகளில் ஒரு நேர் கோட்டு முறையைப் பயன்படுத்துவதன் மூலம் பிற சொத்துக்களுக்கான தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் கணக்கிடப்படுகின்றன. இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் முதன்மை வருடாந்த விகிதங்கள பின்வருமாறு:

கட்டடங்கள்	2.5%
பொறியும் இயந்திரமும்	7.5%
ஆடியோ அதிரவெண் உபகரணம்	7.5%
தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள்	10%
டிரான்ஸ்மிட்டர்	7.5%
மோட்டார் வாகனங்கள்	25%
சங்கீத உபகரணங்கள்	10%
கணினி உபகரணங்கள்	50%
ஒலிப்பதிவு நாடாக்கள்	33.33%
தளர்வு உபகரணங்கள்	50%

ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும், சொத்தின் எஞ்சிய மதிப்புகள் மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பொருத்தமாக இருந்தால் சரிசெய்யப்படும்.

சொத்தின் சுமந்து செல்லும் தொகை அதன் மதிப்பிடப்பட்ட மீளக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால், ஒரு சொத்தின் சுமந்து செல்லும் தொகை உடனடியாக அதன் மீட்கக்கூடிய தொகைக்கு எழுதப்படும்.

ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்களை அகற்றுவதில் கிடைக்கும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவற்றின் சுமந்து செல்லும் தொகையைக் குறிப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன மற்றும் செயற்பாட்டு இலாபத்தை நிர்ணயிப்பதில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் விற்கப்படும் போது, பிற இருப்புக்களில் சேர்க்கப்பட்ட தொகைகள் தக்க வருவாய்க்கு மாற்றப்படும்.

3.2.2 மூலதன வேலை முன்னேற்றம்

மூலதன வேலை முன்னேற்றம் என்பது பொருட்களின் திரட்டப்பட்ட செலவு மற்றும் ஒரு சொத்தின் கட்டுமானத்துடன் நேரடியாக தொடர்புடைய பிற செலவுகளைக் குறிக்கிறது. மூலதன பணிகள் முன்னேற்றம் என்பது கணிசமாக நிறைவடைந்த நேரத்தில் அந்தந்த சொத்து கணக்குகளுக்கு மாற்றப்படும் மற்றும் அதன் நோக்கம் பயன்படுத்த தயாராக உள்ளது.

3.2.3 நிதி சொத்துக்கள்

3.2.3.1. வகைப்பாடு

3.2.3.2 கடன்கள் மற்றும் பெறத்தக்கவை

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் செயலில் உள்ள சந்தையில் மேற்கோள் காட்டப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடன் வழித்தோன்றல் அல்லாத நிதிச் சொத்துகளாகும். அறிக்கையிடல் காலம் முடிவடைந்த 12 மாதங்களுக்கும் மேலான முதிர்வுகளைத் தவிர, அவை தற்போதைய சொத்துகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை நடப்பு அல்லாத சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளில் நிதி நிலை அறிக்கையில் 'வர்த்தகம் மற்றும் பிற பெறத்தக்கவை' மற்றும் 'காசு மற்றும் காசுக்குச் சமமானவை' ஆகியவை அடங்கும். (குறிப்புகள் 13 மற்றும் 14).

3.2.5.4. அங்கீகாரம் மற்றும் அளவீடு

இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான மதிப்பில் கொண்டு செல்லப்படும் நிதி சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயமான மதிப்பில் அங்கீகரிக்கப்படுகின்றன, மேலும் பரிவர்த்தனை செலவுகள் வருமானக் கூற்றில் செலவிடப்படுகின்றன. முதலீடுகளிலிருந்து பணப்புழக்கங்களைப் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகிவிட்டால் அல்லது உரிமையின் அனைத்து அபாயங்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமாக மாற்றும்போது நிதி சொத்துக்கள் அடையாளம் காணப்படுகின்றன. விற்பனைக்கு கிடைக்கும் நிதி சொத்துக்கள் மற்றும் நிதி சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் மூலம் பின்னர் நியாயமான மதிப்பில் கொண்டு செல்லப்படுகின்றன. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் பின்னர் பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி கடன்தீர் நிதிச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

'நிதி சொத்துக்களின் நியாயமான மதிப்பில் இலாபம் அல்லது நட்டம்' வகையின் நியாயமான மதிப்பில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும் வருமானங்கள் அல்லது இழப்புகள் அவை எழும் காலகட்டத்தில் 'பிற (இழப்புகள்) ∴ வருமானங்கள் - தேறிய' என்பதன் கீழ் வருமானக் கூற்றில் வழங்கப்படுகின்றன.

விற்பனைக்குக் கிடைப்பதாக வகைப்படுத்தப்பட்ட பண மற்றும் பணமல்லாத பத்திரங்களின் நியாயமான மதிப்பில் மாற்றங்கள் மற்ற விரிவான வருமானங்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. விற்பனைக்குக் கிடைக்கும் என வகைப்படுத்தப்பட்ட பத்திரங்கள் விற்கப்படும்போது அல்லது பலவீனமடையும் போது, உரிமையாண்மையில் அங்கீகரிக்கப்பட்ட திரட்டப்பட்ட நியாயமான மதிப்பு மாற்றங்கள் வருமான அறிக்கையில் 'முதலீட்டுப் பத்திரங்களிலிருந்து கிடைக்கும் இலாபங்கள்' என சேர்க்கப்படுகின்றன. பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்ட விற்பனைக்கு கிடைக்கக்கூடிய பத்திரங்களுக்கான வட்டி மற்ற வருமானத்தின் ஒரு பகுதியாக வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

1.3 நிதிக் கூற்றுக்கள் குறித்து முகாமையினதும் ஆளுகையினைக் கொண்டவர்களினதும் பொறுப்புக்கள்

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கண்ணோட்டத்தினைக் கொடுக்கக்கூடிய நிதிக் கூற்றுக்களைத் தயார்படுத்துதல் மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களின் தயாரித்தலை இயலுமாக்குவதற்கு அவசியம் என முகாமைத் தீர்மானிக்கும் உள்ளகக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்து நிலைத்தலுக்கான ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்கு எண்ணினாலோ அல்லது வேறு மாற்றீடு இல்லாதபோது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தாலோ தவிர தொடர்ந்து செல்லல் அடிப்படையின் கீழ் கணகுகளை வைத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிலைத்து நிற்றலுக்கான விடணங்களை வெளிப்படுத்துதல் முகாமையின் பொறுப்பாகும்.

ஆளுகை வித்திக்கப்பட்டவர்கள் கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பில் மேற்பார்வை செய்வதற்கு பொறுப்புடையவராவர்.

2018இன் தேசிய கணக்காய்வு சட்ட இல 19இன் 16(1) பிரிவின் பிரகாரம், கம்பனியால் வருடாந்த மற்றும் அவ்வப்போது நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய எல்லா பதிவுகளையும் உரிய ஏடுகளையும் பேணுவதற்கு கம்பனி கடப்பாடுடையது.

1.4 **நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு**

மொத்தமாக நிதிக் கூற்றுக்களின் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்கள் அல்ல என்ற சாதாரண உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். சாதாரண உறுதிப்பாடு உயர் மட்டத்திலான சான்றிதழ் என்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் எண்ணிக்கை ரீதியான பிறழ் கூற்றுக்களை இனங்காணக்கூடிய உறுதிப்பாடாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டாக தாக்கம் செலுத்தும் எண்ணிக்கை ரீதியான பிறழ்கூற்றுக்கள் நிகழ முடியுமாயினும் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தாக்கத்தை செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் ரீதியான முடிவு மற்றும் தொழில் ரீதியான சந்தேகத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் நிகழ முடியுமான எண்ணிக்கை ரீதியான பிழையான கூற்றுக்களின் ஆபத்தை இனம்காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிகழக்கூடிய ஆபத்தைத் தவிர்ப்பதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தட்டிக்கழித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை கைவிடுதல் என்பன மோசடி நிகழுவதற்கு ஏதுவாக இருப்பதால், தவறுகளால் ஏற்படக்கூடிய ஆபத்தை விட மோசடியின் விளைவாக ஒரு பிறழ்கூற்று கண்டறியப்படாத ஆபத்து பாரியது.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பில் நான் அபிப்பிராயம் தெரிவிக்க இங்கு முன்வரவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் தகைமையை நான் மதிப்பிடுகினறேன்.

- நிகழ்வுகள் அல்லது நிலமைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைப்பாடு பற்றிய எண்ணிக்கை ரீதியான எதிர்பாராத விளைவுகள் உள்ளனவா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைப்பாடு பற்றிய அடிப்படையைப் பயன்படுத்துவதன் ஏற்புடமை நான் தீர்மானிக்கின்றேன். போதியளவு எதிர்பாரா நிகழ்வு உள்ளதாக நான் முடிவு செய்யுமிடத்து நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை செலுத்த வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாத விடத்து எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். ஏன்னுடைய முடிவுகள் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையில் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில்

அமைந்துள்ளன. எவ்வாறெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைப்பாடு முடிவடைய காரணமாகலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களில் ஒட்டுமொத்த சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செயகின்றேன்.

  எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்களுடன் நான் தொடர்புகொள்கின்றேன்.

2. <u>வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தற் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை</u>

2018இன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவின் பிரகாரம், கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதோடு, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை எனும் பிரிவில் விளக்கியுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, கணக்காய்விற்கு அவசியமான அனைத்து தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளதுடன், எனது விசாரணை மூலம் தெரியவரும் விடயம் யாதெனில், நிறுவனம் உரிய முறையில் நிதி அறிக்கைகளை பேணிவந்துள்ளது என்பதாகும்.

- 2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்வைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டுடன் ஒத்துப்போகின்றன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் அனைத்தும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

  பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் மீது மற்றும் பொருண்மை ரீதியான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் பிரகடனங்களை செய்யுமளவுக்கு எந்தவொரு விடயமும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வர்த்தகத்தின் சாதாரண காரணத்திற்கு அப்பாற்பட்டவையாகிய நிறுவனத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் ஏதேனும் நேரடி அல்லது மறைமுக ஈடுபாடு நிறுவனத்தின் ஆளும் குழுவின் யாராவது ஒருவருக்கு இருப்பின் அதனைக் குறிப்பிடுதல்.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த, ஏதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளும் குழுவினால் வழங்கப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக அன்றி செயற்பட்டுள்ளாரெனக் குறிப்பிடுதல்.

சட்டங்கள்/ நிபந்தனைகளுக்கு உசாவுகை	விபரம்
(அ) 2017 இல 24 கொண்ட உள்நாட்டு இறைவரிச் சட்டம்	
(i) 16(2)(ஆ) பிரிவு மற்றும் நான்காவது அட்டவணை	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தேய்மானததிற்கு உள்ளாகக்கூடிய சொத்துக்களான 84,561,277 ரூபா செவிப்புல மீடிறன் உபகரணங்கள், 27,296,918 ரூபா கட்டடங்கள், 31,078,837 ரூபா கணினிகள், 2,871,461 ரூபா தளபாடங்கள், 1,458,381 ரூபா இயந்திரங்கள், 3,400,000 ரூபா டிரான்ஸ்மீட்டர், 2,700,000 ரூபா மென்பொருள் ஆகியவற்றிற்கான மூலதனக் கொடுப்பனவினைக் கணக்கிடும் போது இப்பிரிவின் பிரகாரம் மூலதனக் கொடுப்பனவு விகிதமாக கட்டடத்திற்கு 5 வீதமும் ஏனைய சொத்துக்களுக்கு 20 வீதமும பிரயோகிக்கப்படாமை காரணமாக 16,998,428 ரூபாவால் மூலதனக் கொடுப்பனவு அதிகமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.
(ii) 10(1)(ஆ) பிரிவு	வரி அறவிடக்கூடிய வருமானத்தினைக் கணக்கிடும் போது தண்டப்பணம் கழிக்கப்படாததாயின் 2018ஆம் ஆண்டில் வரி அறவிடக்கூடிய வருமானததைக் கணக்கிடும் போது தேறிய இலாபத்திலிருந்து குறைவடைந்துள்ள 521,279 ரூபாவான தண்டப்பணம் தேறிய இலாபத்திற்கு சேர்க்கப்படுதல் வேண்டுமாயினும், அவ்வாறு செய்யாது வரி அறவிடக்கூடிய வருமானம் கணக்கிடப்பட்டிருந்தது.
(ஆ) 1982 இல 43 கொண்ட திருத்தப்பட்ட முத்திரை வரிச்சட்டம் 7ஆவது பந்தி	எல்லா வருடத்திலும் மார்ச் 31ஆந் திகதி, யூன் 30ஆந் திகதி, செப்தெம்பர் 30ஆந் திகதி, திசெம்பர் 31ஆந் திகதி ஆகிய தினங்களில் முடிவடையும் காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்குள் முத்திரைக் கட்டணமாக செலுத்த வேண்டிய தொகை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டியுள்ளதாயினும், கூட்டுத்தாபனத்தினால் முத்திரை வரி 23 நாட்கள் மற்றும் 79 நாட்களுக்கு இடையிலான கால தாமதத்துடன் அனுப்பப்பட்டிருந்தது.
(இ) தாபன விதிக்கோவையின் XLVIII பிரிவின் 31.11.1 பந்தி	குற்றச் செயலொன்று தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட வேளையில் சேவையில் இருந்து இடைநீக்கஞ் செய்யப்பட்டு இருக்கும் காலத்தினுள் சம்பளம் கொடுக்கப்படாததாயினும் தாபனப் பிரிவினால் மேற்படி உட்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு இடைநீக்கஞ் செய்யப்பட்ட அலுவலர்க்கு பாதிச் சம்பளத்தினைக் கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைத்து அங்கீகாரத்தின் பின்னர் 2011 ஒக்டோபர் மாதம்

		முதல் 2016 ஆகஸ்ட் மாதம் வரை எவ்விதச் சம்பளத்தையும் கொண்டிராத அலுவலர் ஒருவருக்கு 954,664 ரூபா பாதிச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.
(ஈ)	அரச நிதிச் சுற்றறிக்கை 03/2015 மூலம் திருத்தியமைக்கப்பட்ட நி.பி. 371(2)(ஆ) மற்றும் 371(5)	தனிப்பட்ட உப முற்பணமுறைபெற்றுக் கொடுக்கப்படும் விசேட பணியொன்றிற்கு அண்மித்த நாளொன்றில் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டியுள்ளதுடன், குறிப்பிட்ட பணி முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த முற்பணமுறை தீர்த்துக் கொள்ளவேண்டி இருப்பினும் 201,000 ரூபாவாகிய முற்பணமுறை 2018 திசெம்பர் திசெம்பர் 31அந் திகதியாகையில் பெற்றுக் கொண்டு 33 நாட்கள் முதல் 293 நாட்கள் வரை தீர்ப்பதற்கு தாமதப்படுத்தப்பட்டு இருந்தது. அதில் 6,000 ரூபா தொகை 13 வருடங்களுக்கும் மேல் பழையது என மேலும் அவதானிக்கப்பட்டது.
(உ)	நிதியியிரமாணங்கள்	
	(i) நி.பி. 110	இழப்பு நட்ட ஆவணத்தில் பொருட்கள் காணாமல் போதல் தொடர்பில் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தொகையினை மீண்டும் வழங்குவதற்கு போகும் பணம் ஆகிய விபரங்களை உள்ளடக்கி இழப்பு நட்ட ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணியிராமை அவதானிக்கப்பட்டது.
	(ii) நி.பி. 396	2019 ஏப்பிரல் 30ஆந் திகதியாகையில் செல்லுபடியாகும் காலம் 06 மாதங்களையும் விடவிஞ்சி இருப்பினும் செலுததுவதற்கு வங்கிக்கு முன்வைக்கப்படாத 424,251 ரூபா பெறுமதியான 86 காசோலைகள் தொடர்பில் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனுள் 27,312 ரூபா காசோலைகள் ஏழு 2017ஆம் ஆண்டிலும் 17,620 ரூபா காசோலைகள் மூன்று 2016ஆம் ஆண்டிலும் வழங்கப்பட்ட காசோலைகளாகும்.
(ஈ)	(ii) மற்றும் (iii)	

- 2018 இல 19ஐக் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் அதிகாரம், பொறுப்புக்கள் மற்றும் பணிகளுக்கு இணைவற்றதாக செயற்பட்டுள்ளதாகக் குறிப்பிடுதல்.

- 2018 இல 19ஐக் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழ் குறிப்பிட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர்ந்த, கூட்டுத்தாபனத்தின் வளங்களைச் சிக்கனமாக, வினைத்திறன்மிக்கதாக மற்றும் விளைபயன்மிக்கதாக காலவரையறையினுள் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதாகக் குறிப்பிடுதல்.

(அ) பெறுகை வழிகாட்டி விதிக்கோவையின் 2.3.1 பந்தியின் பிரகாரம் கட்டட நிர்மாணங்களின் போது பெறுகை நிறுவனத்தினால்காணியைச் சுவீகரித்துக் கொள்ளும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும் செயற்றிட்டத்தினை

தடங்கலின்றி செயற்படுத்துவதற்கும் தேவையான எல்லா விடயங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவது பெறுகைக் கமிட்டி அலுவலர்களின் கடமை மற்றும் பொறுப்பிற்கு உட்பட்டதாயினும், அத்தெளிவுபடுத்தலைப் பெற்றுக் கொள்ளாது உயர் கல்வி அமைச்சிற்கு சொந்தமான காணியொன்றில் மலைநாட்டுச் சேவைக்காக இரண்டுமாடிக் கட்டமொன்றினைக் கட்டுவதற்கு 2018 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் 5,830,890 ரூபா செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பழைய கட்டடமொன்றுடன் கூடிய 23 காணிநிலமொன்றைக் கொண்ட அனிவத்த பஹிரவகந்த காணி இக்காணிக்கு 500 மீற்றர் தூரத்தில் இருந்தும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) வருடாந்தம் 200 மி. ரூபாவிற்கும் அதிகமான பெறுமதிமிக்க பெறுகை நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படினும், கொள்வனவிற்காக வேறான பிரிவொன்று அமையாமை காரணமாக பெறுகைச் செயற்பாடுகளைத் திட்டமிடல் உரிய முறையில் நடைபெற்று இருக்கவில்லை. பெறுகை வழிகாட்டி விதிக்கோவையின் நியதிகளுக்கு அமைய பெறுகைக் கமிட்டி மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு கமிட்டி என்பன நிறுவப்பட்டு இருப்பினும், விபரக்குறிப்புகளைத் தயாரித்தல், ஏலவிற்பனை மதிப்பீடு, தொழில்நுட்ப மதிப்பீடு ஆகிய செயற்பாடுகள் ஒவ்வொன்றும் உள்ளகப் பரிசோதனைக்கு உட்படுத்தும் விதத்தில் ஒழுங்கமைத்து இருக்காமையால் கொள்வனவுகளிற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாக இருந்தது. இதன்படி, கொள்வனவின்போது தவறுகள் ஏற்படும் இடரினைக் குறைப்பதற்கு கொள்கைகள், நடைமுறைப் பயிற்சிகள், ஒழுங்கமைப்புக்கள் போன்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்தவதற்கு உரிய உத்தியோகத்தர்களால் இது வரை முடியாதுள்ளது.

(இ) கட்டட நிர்மாணிப்பின்போது கொள்வனவு பெறுகை நிறுவனத்தினால் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும் செயற்றிட்டத்தினை தடங்கலின்றி செயற்படுத்துவதற்கும் தேவையான எல்லா விடயங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துதல் வேண்டும். எனினும், யாழ்ப்பாண யாழ் எப்.எம். சேவைக்கு ஒலிபரப்புக்கூட கட்டடத்தொகுதியொன்றினைக் கட்டுவதற்கு 2018 கொள்வனவுத் திட்டத்திற்கு 42.50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பினும், 2018ஆம் ஆண்டு இறுதி வரையிலும் காணியைச் சுவீகரிப்பதற்கு முடியாது போனமையால் இச்செயற்றிட்டத்தினை மீளாய்வாண்டில் ஆரம்பிப்பதற்கு முடியாது போயிற்று.

(ஈ) நி.நி. 50இன் பிரகாரம் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படும் எல்லா பெறுகைகளும் நிதி ஆண்டினுள் தமது கூட்டுத்தாபனத்திற்கு நிறைவேற்றக்கூடிய ஆற்றல் உள்ளதாக கணக்குக் கொடுக்கும் உத்தியோகத்தர்கள் வகைகூறுதல் வேண்டும். எனினும், கடந்த பல ஆண்டுகளாக பெறுகைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு பொறுப்புக்கூறும் தரப்பினரால் முடியாது போயுள்ளது. இவ்வாறு தோல்வியடைந்த பெறுகைத் திட்டம் மற்றும் பலவீனமான நிதிமுகாமைத்துவத்தின் காரணமாக அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட மூலதனப் பங்காளர்களை வினைத்திறன்மிக்கதாகப் பயன்படுத்திக் கொள்ளாமையால் ஒவ்வொரு வருட இறுதியிலும் 100 மில்லியன் ரூபாவிற்கு அதிகமான தொகை தவறாகக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(உ) பெறுகை வழிகாட்டிக் விதிக்கோவையின் 3.4.1இன் பிரகாரம், சந்தை விலை செம்மைப்படுத்தும் முறை, பெறுமதியில் குறைந்த உடனடியாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளுக்குப் பயன்படுத்த முடிவதாயினும் நிறுவனத்தின் கணினித் தேவை மற்றும் அதன் கிரயம் ஒரு வருடத்திற்கும் மேலாக அறிந்த நிலையில் வருடம் பூராகவும் 10 சந்தர்ப்பங்களிற்கு அதிகமான தடவைகளில் கணினித் தேவைகளை சிறு பகுதிகளாக வேறுபிரித்து சந்தை விலை செம்மைப்படுத்தும் முறைமைக்கு 9..12

மில்லியன் ரூபாவிற்கு கொள்வனவுகளை மேற்கொண்டமையால் திறந்த விலைகோரல் மூலம் பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்த பெரிய அளவிலான கொள்வனவகளின் சாதகங்களை இழந்திருந்ததுடன், கூடிய விலையினையும் செலுத்த வேண்டி இருந்தது.

(ஊ) பெறுகை வழிகாட்டி விதிக்கோவையின் 4.2.1 பந்தியின்(அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம், பெறுகை நிறுவனங்களினால் பிரதான பெறுகைத் திட்டத்தினைத் தயாரிக்க வேண்டியுள்ளதுடன், குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைத்திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும். எனினும், கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்கு மாத்திரம் சுருக்கமான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(எ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 பந்தியின் (ஆ) பிரிவின் பிரகாரம், பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இருந்து நிறைவு செய்யும் வரை ஒவ்வொரு பெறுகைச் செயற்பாட்டினதும் படிமுறைகள் காலவரிசைப்படி விபரித்து பெறுகைக் கால அட்டவணையொன்றும் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

3.1 முகாமைத்துவ செயற்றிறமின்மைகள்

(அ) 2018 மார்ச் மாதம் ஹப்புத்தளை ஒலிபரப்புக்கூட வளவில் உள்ள தனியார் ரூபவாஹினீ நிறுவனத்திற்கு உரிய பாதுகாக்கும் பொறுப்பு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த ஆர் எப் கேபிள் ஒன்றின் ஒரு பகுதியை அனுமதியின்றி அறுத்துக்கொண்டு போனமை தெடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையில் குற்றஞ் சாட்டப்பட்ட அலுவலர்களிடமிருந்து ஏதுவாகிய காரணங்களை மாத்திரம் விசாரனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு தினமாகிய 2019 யூலை 31ஆந் திகதி வரையில் முறையான விசாரணையினை நடாத்தி பொறுப்புக்கூறவேண்டியவர்களிடம் இருந்து நட்டத்தினை அறவிடுவதற்கு வேண்டிய வழிமுறைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறுவட்டுக்கள்,கேசட்கள் நூல்நிலையம் பொருத்தமற்ற சூழலில் நிறுவப்பட்டிருப்பதால் தட்டுகள் விரிவடைதல், சுருங்குதல், பூஞ்சணம் பிடித்தல், தூசு படிதல் போன்றவற்றால் குறுவட்டு மற்றும் கேசட் நாடாக்களின் உட்பாகத்தில் பாதிப்பு ஏற்படுவது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, கறையான்களுக்குச் சாதகமான சூழல் காணப்படுகின்றமையால் கேசட்கள் மற்றும் குறுவட்டுக்கள் மீது கறையான்கள் படிகின்றமை காரணமாக கேசட்கள் அழிந்துக் கொண்டிருக்கின்றன. அதனால் தினமும் அத்தட்டுக்களைக் கழுவுவதற்கு, உலர்த்துவதற்கு வேண்டியுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்திற்குரிய பழைய இசை நிகழ்ச்சிகள் டிஜிட்டல் முறையில் பாதுகாக்கும் போது மீண்டும் பாவனைக்கு எடுக்க இயலுமான வகையில் வெளி இடமொன்றில் தரவுக் களஞ்சியமொன்றை (Backup) பேணியில்லாததுடன், 2017ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட சேவையகம் செயலிழந்தமை (Server Failure) காரணமாக 2009 முதல் பாதுகாக்கப்பட்ட எல்லா தரவுகளும் அழிவுற்றன. இவ்வாறு அழிவுற்ற தரவுகளை மீட்பதற்கும் கணக்காய்வு தினமாகிய 2019 ஜனவரி 08ஆந் திகதி வரையிலும் அதிகாரிகளினால் இயலாமல் போயுள்ளது.

(ஈ) ஹுன்னஸ்கிரிய ஒலிபரப்புக்கூட வளவிற்குரிய நிலுவை வாடகையினை அறவிடுதல் தொடர்பில் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்

கொள்வதற்கு காணியின் உரிமையாளராகிய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனததினால் 2014 நவம்பர் 07ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு நிறுவனங்களினதும் பங்களிப்புடன் 2016 செப்தெம்பர் 09ஆந் திகதி பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், இப்பேச்சு வார்த்தைக்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக எவரும் கலந்து கொள்ளவில்லை என்பதுடன், அதனால் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் முன்வைக்கப்பட்ட 2016 யூலை 01ஆந் திகதியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிலுவைத் தொகையான 9,075,833 ரூபாவினைச் செலுத்தி இப்பிரச்சினையை தீர்த்துக் கொள்ளுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டது. எனினும் உரிய நிலுவை வாடகையினைச் செலுத்தவதற்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் கணக்காய்வுத் தினம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அனுராதபுர மாவட்டத்தின் நெகனஹிரநுவர கம் பலாத்த பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்கு உரிமையல்லாத அனுராதபுர நவ நகரத்தில் 1ஆவது கட்ட இல 513 கொண்ட பெயருள்ள காணியின் சட்டபூர்வ உரிமையற்ற நிலையில் 1981ஆம் ஆண்டு முதல் ரஜரட்ட சேவையினை நடாத்திக்கொண்டு செல்வதுடன், கணக்காய்வு தினம் வரையிலும் அதன் உரிமையினைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படடிருக்கவில்லை.

(ஊ) 2016ஆம் ஆண்டில் காணாமல் போயுள்ள பவர் லொகர் இயந்திரம் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை 02 வருடங்கள் கழிந்ததன் பின்னர் 2018ஆம் ஆண்டில் ஆரம்பித்து அதற்கு 188,000 ரூபா செலவிடப்பட்டிருப்பினும், 2019ஆம் ஆண்டில் விசாரணை அறிக்கை கிடைக்கும் போது குறிப்பிட்ட நிகழ்வு தொடர்பான குற்றவாளிகள் இருவரும் ஓய்வு பெறச்செய்யப்பட்டுள்ளனர்.

3.2 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) 2010ஆம் ஆண்டில் மகாவலி அதிகார சபையிலிருந்து கிடைத்து முறையாக உரிமையினைச் சாட்டப்படாத எனினும் 150,000 ரூபாவிற்கு மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள மோட்டார் வண்டி மீளாய்வாண்டின் போது கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், உரிய நிறுவனத்திற்கு மீண்டும் ஒப்படைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காது கணக்காய்வுத் தினமாகிய 2019 யூலை 05ஆந் திகதி வரையிலும் ஏக்கல டிரான்ஸ்மீட்டர் வளவில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்பட்ட மூன்றுமாடிக் கட்டடத்தில் தற்போது கீழ் தளத்தை மாத்திரம் பயன்படுத்துவதுடன், முதலாம் மாடி மற்றும் இரண்டாவது மாடி என்பன பாவனைக்கு எடுக்காது பயனற்று உள்ளன.

3.3 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31ஆந் திகதியில் தொலை தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவிற்கு செலுத்தவேண்டிய மொத்தம் 149,420,035 ரூபா நிலுவையினுள் 1981ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை, அதாவது, 37 வருடங்களாகத் தீர்க்கப்படாது காணப்படும் நிலுவைகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 01 ஆண்டு முதல் 18 ஆண்டுகள் வரை பழைய 14,958,606 ரூபாவான ஏனைய கிடைக்க வேண்டிய வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 31ஆந் திகதியாகையிலும் விளைவுமிக்கதாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1986ஆம் ஆண்டு முதல் தொடரும் 32 ஆண்டுகளை விடப் பழைய பணிக்குழாத்தினர் சார்பாக கூட்டுத்தாபனத்தினால் 267,459 ரூபா செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய தொகையொன்று 2018 திசெம்பர் 31ஆந் திகதியில் தீர்க்கப்படாது முன்கொணரப்பட்ட வண்ணம் இருந்தது.

(ஈ) 2017ஆம் ஆண்டில் தனியார் வழங்குனர்களுக்கு செலுத்தியிருந்த 451,293 ரூபாவான முற்பணம் 2018 திசெம்பர் 31ஆந் திகதியாகையிலும் தீர்க்கப்படாது வியாபாரம் மற்றும் ஏனைய கடன் பெற்றோரில் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய 65,085,768 ரூபாவாகிய வெளிநாட்டு கடன்பெற்றேகடன்பட்டோர் நிலுவைகள் மொத்தத்தில் 60,654,436 ரூபா கடன்பட்டோர் நிலுவைகள் 10 வருடங்களுக்கும் மேல் பழையவை என்பதுடன், இந்நிலுவைகளைத் தீர்ப்பதற்கு இதுவரை விளைபயன்மிகு வழிமுறைகள் மேற்கொண்டு இருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் திசெம்பர்31ஆந் திகதியில் சேர் பெறுமதி 85,938,354 ரூபாவாகிய 104 கடன்பட்டோருக்கு நிலுவையை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதுடன், அதில் 924,500 ரூபா பெறுமதிமிக்க கடன்பட்டோர் மூவர் மாத்திரம் பதில் கடிதம் அனுப்பி இருந்ததுடன், அதில் ஒரு கடன்பட்டவர் தமது கடன் நிலுவையினை 2011ஆம் ஆண்டில் செலுத்தி முடிந்துள்ளதாக அறிவித்துள்ளதுடன், இன்னொரு கடன்பட்டவர் கூட்டுத்தாபனத்தினால் குறிப்பிட்டுள்ள நிலுவை குறித்து இணங்காமையினை அறிவித்துள்ளார்.

(எ) 2013 மே 17ஆந் திகதி ஊவா மாகாண செயலகத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், ஊவா மக்கள் ஒலிப்ரப்புச் சேவையின் ஒப்பந்த கால வரையறை 2016 மே 16ஆந் திகதியில் முடிவடைந்துள்ளதுடன், 2016 மே மாதம் இறுதியில் கிடைக்க வேண்டிய முழு நிலுவைத் தொகை 17,368,230 ரூபாவாக இருந்தது. 2018 செப்தெம்பர் 17அந் திகதி ஊவா மாகாண சபையினால் 2 மில்லியன் ரூபா மாத்திரம் காசோலை மூலம் செலுத்திஉள்ளதுடன், அதன் பிரகாரம் இது வரையில் 15,368,230 ரூபா நிலுவை வருவாய் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியுள்ளது.

3.4 நிதி முகாமைத்தவம்

கூட்டுத்தாபனத்தின் பிரதான வங்கிக் கணக்கில் 2018 செப்தெம்பர் 31ஆந் திகதியாகையில் காணப்பட்ட 385,180 ரூபாவாகிய பற்று மாற்றல்கள் (Debit Transfers) மற்றும் 35,505 ரூபாவாகிய வரவு மாற்றல்கள் (Credit Tansfers) 2019 ஏப்பிரல் 30ஆந் திகதியாகியும் இனங்காணப்பட்டு தீர்தது வைக்கப்படவில்லை.

3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) 1958 இல 15 கொண்ட ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 15ஆவது பந்தியின் பிரகாரம் ஊழியர் நிதிய பங்களிப்புக்களைக் குறைத்தக் கொண்ட மாதத்திற்குப் பின் மாதத்தின் இறுதித் தினத்திற்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பவேண்டியிருப்பினும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2007, 2008 வருடங்களில் ஊழியர் சேமலாப நிதிய அனுப்புகைகள் தாமதமாகியதன் காரணமாக 2007 ஏப்பிரல் முதல் 2009 திசெம்பர் காலத்திற்கு மிகை அறவீடு செலத்துவதற்கு ஏற்பட்டமையால் நிறுவனத்திற்கு 15,051,384 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) 1958 இல 15 கொண்ட ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 8(1)ஆவது பிரிவின் பிரகாரம், எல்லா கூட்டுத்தாபன ஊழியருக்கும் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பினும், கொத்மலே மக்கள் ஒலிபரப்பில் சேவைபுரிந்த ஊழியர்கள் ஐந்து பேர் தொடர்பில் ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புத் தொகையினைச் செலுத்தாத குற்ற்த்திற்கு கூட்டுத்தாபனத்திற்கு 1,783,507 ரூபா மிகை

அறவீட்டினைச் செலுத்துவதற்கு நீதிமன்றம் கட்டளையிட்டமையால் நிறுவனத்திற்கு அந்த அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

(இ) 1983 இல 12ஐக் கொண்ட பணிக்கொடைச் சட்டத்தின் 5.1 பிரிவின் பிரகாரம் சேவையினை முடிவுறுத்தும் நாள் முதல் 30 நாட்களுக்குள் பணிக்கொடை கொடுப்பனவினைச் செலுத்த வேண்டியிருப்பினும் 08 மாத காலம் தாமதப்படுத்தி அலுவலர்கள் இருவருக்கு பணிக்கொடையினைச் செலுத்தியமையால் தொழில் திணைக்கள ஆணையாளரினால் மிகை அறவீட்டினை விதித்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு 253,884 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

(ஈ) 17 வருடங்களை விடக் கூடதலான காலம் முதல் முன்கொணர்ந்துள்ள 221,965 ரூபா தொகை மோசடியொன்று மற்றும் 2007ஆம் ஆண்டில் ஏற்படவிருந்த 281,110 ரூபா மேலும் அது போன்றே மோசடியொன்று மீளாய்வாண்டின் இறுதியாகையிலும் திருப்பிப் பெறாது முன்கொணரப்பட்டு இருந்தது.

(உ) 2016அம் ஆண்டில் ருஹுணு சேவையில் உள்ள நிலையில் காணாமற் போன 12 இசைக் கருவிகள் தொடர்பில் அப்பொருட்களின் மீண்டும் மாற்றீட்டுப் பெறுமதியாகிய 305,900 ரூபா தொகை பொறுப்புக்கூற வேண்டிய அலுவலரிடமிருந்து அறவிடுவதற்கு முகாமையினால்கணக்காய்வு தினமாகிய 2019 யூலை 31ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

3.6 மனிதவள முகாமைத்தவம்

(அ) தாபன விதிக்கோவையின் II அத்தியாயத்தின் 2.1 பீரிவு பிரகாரம், எல்லா பதவிகளுக்கும் யாதாயினும் பதவியொன்று ஏதேனும் தரத்திற்கு அல்லது சேவைக்கு உரியதாயின் பதவியின் சம்பள அளவுதிட்டம், தேவையான தகுதிகள், வயது எல்லைகள் மற்றும்உரிய ஏனைய விபரங்களை திட்டவட்டமாக உள்ளடக்கி உரிய நிறுவனத்தினால் ஆட்சேர்ப்புப் படிமுறை ஒன்றினைத் தயாரித்து 2.2 முதல் 2.5 வரையிலான உப பிரிவுகளின் பிரகாரம் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதுடன், கணக்காய்வு சந்தர்ப்பமாகிய 2019 ஆகஸ்ட் 05ஆந் திகதி வரை ஆட்சேர்ப்புப் படிமுறையினைத் தயாரித்து அனுமதி பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(ஆ) இல டீஎம்எஸ்/1591/5/3 மற்றும் 2018 செப்தெம்பர் 19ஆந் திகதியிட்ட முகாமைத்தவச் சேவைகள் திணைக்கள பணிக்குழாத்தினரை அனுமதிக்கும் கடிதத்தின் பிரகாரம், கூட்டுத்தாபனத்திற்கு ஆட்சேர்ப்புப் படிமுறையொன்றினைத் தயாரித்து முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளுதல் வேண்டும் என கட்டளையிடப்பட்டிருப்பினும், அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு படிமுறையின்றி கூட்டுத்தாபனத்தினால் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டபிள்யூ. பீ. சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2018 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கருத்துக்கள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனதத்தின் 2018 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் மீது 2018இன் தேசிய கணக்காய்வுச் சட்ட இல 19இன் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கருத்துரை

மேற்குறிப்பிட்ட அறிக்கைக்கு கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட பதில் அறிக்கையை கீழ்வருமாறு முன்வைக்கின்றேன்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

i. கூட்டுத்தாபனம் தயாரித்த கணக்குகளில் ஒரு வருடம் மாத்திரம் காட்டப்பட்டுள்ளதுடன், நியமத்தின் பிரகாரம் எதிர்வரும் வருடங்களில் கணக்குகள் சரி செய்யப்பட்டுள்ளன.

ii. கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெளிநாட்டுச் செலாவணி இலாபம் நிதி ஆகுசெலவிலிருந்து கழித்துக் காட்டப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கின்றேன். 2019 கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஆ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

2018 நிதிக்கூற்றுக்களில் முன்வைத்துள்ள எல்லா முன்னைய காலப் பகுதிக்கும் நடைமுறையில் இயலுமான அளவில் நிதிக்கூற்றுக்களில் உள்ள நேர்கோட்டு உருப்படிகள் தொடர்பில் சரிசெய்யவேண்டிய தொகை மற்றும்முன்வைக்கப்பட்டுள்ள பழமையான முன்னைய காலப்பகுதி ஆரம்பத்தில் சரிசெய்த அளவு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தகவல்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(இ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

i. சொத்தொன்றின் ஆகுசெலவாக குறிப்பிடவேண்டிய செலவுகள் பராமரிப்புச் செலவாகக் கருதப்பட்டிருப்பதால் நிலையான சொத்துக்கள் அவ் அளவிலிருந்து குறைவாகக் காட்டப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கின்றேன். 2019 கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது.

ii. கொள்வனவு செய்யப்பட்ட 08 டிரான்ஸ்மீட்டர்களை நிறுவுதல் மற்றும் செயற்பாடு தொடர்பில் பெற்றுக்கொடுத்த பயிற்சியொன்றினால் இயங்திரங்களைச் செயற்படுத்தவதற்கு உரிய செலவொன்று என்பதால் சொத்துக்கள் கணக்கில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iii. தலைமை அலுவலகத்தில் மென்பொருள் உருப்படிகளின் நிலுவை கணக்கீட்டுக் குறிப்புக்களில் தேறிய பெறுமதியில் காட்டப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கின்றேன். 2019 கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது.

iv. கணக்குக் கூற்றுக்களில் மென்பொருளுக்கு தேய்மான விகிதம் வெளிப்படுத்தப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். 2019ஆம் ஆண்டு முதல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ. ஒப்பந்தத்தினை முறித்த வழங்குனர்களின் செயலாற்றுகை முறி மென்பொருள் கணக்கில் வரவுவைத்தல் சரி அல்ல என்ற கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2019 கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது.

ஆ. வருடத்தினுள் அறவிட வேண்டிய நட்டங்களை குறிப்புக்களாக வெவ்வேறாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இ. 2018 வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பில் இனங்காணப்பட்ட இறுவட்டுக்கள், கேசட்டுகள் மற்றும் சஞ்சிகைகள் இருப்பினை சரக்கிருப்பு கணக்கெடுப்பு சபையினால் 2019ஆம் ஆண்டில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈ. மென்பொருள் தேய்மானப் பெறுமதி அரச பிரதான பெறுமானத்தேய்வு கணக்கில் பற்று வைத்தல் சரி அல்ல என்ற கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2019 கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது.

உ. அறவிடவேண்டிய தொகையொன்றாக பணிக்கொடைத் தொகையில் தடுத்துவைத்த பணம் வருமானமாக கணக்குவைத்தல் தவறு என்ற கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2019 கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது.

ஊ. ஐயப்பாடான கடனை ஒதுக்கும் போது 02 வெளிநாட்டு ஒலிபரப்புச் சேவைகளில் இருந்து கிடைக்க வேண்டிய கடனுக்கான ஐயப்பாடான கடன் ஒதுக்கப்டவில்லை.

எ. 2008 நிதி ஆண்டில் இத்தொகை மூலதன மானியமொன்றாகக் கருதி கணக்கு வைத்துள்ள போதும், ஏற்கனவெ ஊவா மக்கள் ஒலிபரப்பில் இருந்து அறவிடவேண்டிய தொகைக்கு செம்மையாக்கப்பட்டுள்ளது.

ஏ. ஹுன்னஸ்கிரிய ஒலிபரப்புக்கூடம் தொடர்பாக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனதிற்கு செலுத்த வேண்டிய வாடகைத் தொகை குறித்து தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஐ. 2018.12.31ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த வரிப் பொறுப்பு குறைவாகக் காட்டப்பட்டுள்ளமை (89,725,536 ரூபா) சரி செய்யப்பட்டுள்ளது.

ஒ. இவ்வரித் தொகையினை நீக்கிக்கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம்.

1.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

அ. ஒலிபரப்புக்கால கடன் கொடுத்தோர் அட்டவணை நிலுவைக்கும் மற்றும் ஒலிபரப்புக்கால கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கின் நிலுவைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டிற்கு காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்யப்பட்டுள்ளது.

ஆ. 1989 முதல் ஆவணங்களைப் பரிசீலனை செய்து கிடைக்வேண்டிய வைப்புக்களுக்கு உரிய அட்டவணைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் வெவ்வேறாக அறவிடவேண்டிய நிலுவைகளை இனங்கண்டு மேலும் இனங்காண முடியாத எனினும் அறவிடவேண்டிய நிலுவை 419,680 ரூபா என இனங்காணப்பட்டுள்ளது.

இ. ஒலிபரப்புக்கால கடன்பட்டோர் நிலுவை நிதிக்கூற்றுக்களில் மற்றும் அட்டவணைகளுக்கு இடையில் பொருந்தாமைக்கு காரணமாக உள்ளது கூட்டப்பட்ட பெறுமதி அட்டவணை கடன்பட்டோர் நிலுவைக்குச் செம்மைப்படுத்தாமல் இருப்பதாகும். 2019ஆம் ஆண்டில் இது சரி செய்யப்பட்டுள்ளது.

ஈ. கணக்குகளில் கிடைக்க வேண்டிய பெறுமானம் மற்றும் அட்டவணைகளின் படி நிலுவை 2019ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டுள்ளது.

1.2.4 **கணக்காய்வுச் சான்றுகளின்மை**

அ.	நே'ன்ஸ் டிரஸ்ட் வங்கிக் கணக்கு நிலுவையினை உறுதிப்படுத்துதல்	மின் அஞ்சல் ஊடாகப் பெறப்பட்டுள்ளது.
ஆ.	காணி நிலையான சொத்துக்கள் அட்டவணை பௌதிக அறுதிப்படுத்தல் அறிக்கை	நிலையான சொத்துக்கள் ஆவணம் நிதிப் பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ளது. காணி ஆவணம் கட்டுப்பாட்டுப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மத்தி அலைவரிசை ஒலிபரப்புக்கூடம் காணப்பட்ட காலத்தில் இலங்கைப் பூராகவும் காணிகள் பாரிய அளவில் கூட்டுத்தாபனத்தின் தேவையின் பிரகாரம் பயன்பாட்டிற்கு கிடைக்கப் பெறினும் தற்காலத்தில் இவை பிரதேச செயலாளர்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன.
இ.	கட்டட நிலையான சொத்துக்கள் அட்டவணை பௌதிக அறுதிப்படுத்தல் அறிக்கை	பொறியியல் பணிப்பாளரின் கீழ் சிவில் பொறியியலாளர் பிரிவின் ஊடாக பௌதிக ரீதியாக சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஈ.	லக்ஹண்ட வியாபார கடன்பெற்றோர் ஆவண விபரம் மற்றும் பெறுமதி உருவாக்கப்பட்டுள்ள விதத்தினைக் குறிப்பிடும் அட்டவணை	இந்நிலுவையினை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஒலிபரப்பு நிறுவனத்தில் விசாரித்துள்ளதுடன், அந்நிலுவை தொடர்பில் கூட்டுத்தாபனத்திற்கு முன்வைத்து பொருத்தமான வழிமுறைகளைக் கையாளுவதற்கு உள்ளது.

1.3 **நிதிக் கூற்றுக்கள் குறித்து முகாமையினதும் ஆளுகையினைக் கொண்டவர்களினதும் பொறுப்புக்கள்**

முகாமையின் பொறுப்பு குறித்து முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை ஆகும்.

1.4 **நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு குறித்து கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

கணக்காய்வில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கின்றேன்.

2 **<u>வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தற் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை</u>**

2018 இல 19தேசிய கணக்காய்வு சட்டத்தின் தேவைகள் விசேட ஏற்பாடுகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை ஆகும்.

சட்டங்கள்.'. நிபந்தனைகளுக்கு உசாவுகை

அ. (i) 16(2) ஆ பிரிவு மற்றும் நான்காவது அட்டவணை - சரி செய்யப்பட்டுள்ளது.

(ii) 10(i) ஆ பிரிவு - சரி செய்யப்பட்டுள்ளது.

ஆ. பண நெருக்கடிகள் காரணமாக முத்திரை வரி செலுத்துதல் தாமதமாகியது.

இ. தாபன விதிக்கோவையின் 31.11.1 பந்தியின் பிரகாரம் குற்றமொன்று தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டபோது பாதிச் சம்பளத்தினைச் செலுத்தவதற்கு இயலாது போயினும், அவ் அலுவலர்க்கு கூட்டத்தாபன ஒழுக்காற்று அலுவலரினால் அவருக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் பாதிச் சம்பளத்தினை வழங்குவதற்கு

அனுமதி பெற்றுக்கொடுக்கும் சந்தர்ப்பத்தில் குற்றமொன்று தொடர்பில் புகாரளிக்கப்பட்டிருக்கவில்லை.

ஈ. அரச நிதிச் சுற்றறிக்கை 03.்.2015இன் பிரகாரம் மற்றும் திருத்தப்பட்ட நி.பி. 371(2) ஆ 371(5)இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 13 வருடங்களுக்கு மேலாக பழைய 6000 ரூபா தொகையினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

உ. i. நி.பி. 110 பிரகாரம் இழப்பு நட்டம் அட்டவணை பேணப்படுகின்றது.

ஊ. ii. நிதிப் பிரமாணம் 396 இ(ii) மற்றும் (iii) பிரகாரம் செல்லுபடியாகும் காலம் முடிவுற்றுள்ள காசோலைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அ. ஒலிபரப்பு எண்ணியல் அலைவரிசையினைத் தெளிவாகப் பரப்பக்கூடிய சிறந்த இடமாக கந்துரட்ட சேவையினை நிறுவும் சந்தர்ப்பத்தில் தெரிவுசெய்யப்பட்டதே இக்காணியாகும். அதில் ஒலிபரப்பு பணிகள் தற்போதும் மேற்கொள்ளப்படுவதுடன், காணியைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆ. பெறுகைப் பிரிவிற்கு உதவி கணக்காய்வாளர் ஒருவர் புதிய ஊழியர் கட்டமைப்பிற்குள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அப்பிரிவினை நிறுவியதன் பின்னர் குறிப்பிட்டபடி உள்ளகக் கட்டுப்பாட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இ. தற்போது காணியைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈ. கணக்காய்வு அவதானிப்பு சரியானது.

உ. பண நெருக்கடி காரணமாக பொருட்களைக் கொள்வனவு செய்தல் பலமுறை நடைபெற்றது.

ஊ. பெறுகைத் திட்டம் வருடாந்தம் தயாரிக்கப்படுகின்றது.

எ. ஒவ்வொரு பெறுகைச் செயற்பாடுகளும் நடைபெறும் சந்தர்ப்பத்தில் அதன் ஒவ்வொரு படிமுறைகளும் வெவ்வேறாக அறிக்கையிடப்பட்டுள்ளன.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

3.1 முகாமைத்துவ செயற்றிறமின்மைகள்

அ. இச்சொத்து தனியார் ரூபவாஹினீ நிறுவனத்திற்கு சொந்தமானதாயின் சொத்தின் பெறுமதியினை உறுதிசெய்ய முடியாது. அந்த ரூபவாஹினீ நிறுவனம் இது தொடர்பில் எவ்வித தலையீட்டினையும் செய்ததில்லை.

ஆ. கூட்டுத்தாபனத்தின் இறுவட்டு கேசட் நூல்நிலையம் நீண்ட காலமாக இந்த இடத்தில் நடாத்தப்பட்டு வருவதடன், அதற்கான பொருத்தமான இடமொன்றினை அமைப்பதற்கு தேடிப்பார்க்கப்படுகின்றது.

இ. முறையான கணனித் தரவுகள் கோவையொன்று தயாரிப்பதற்கும் பழைய பாட்டுக்களைப் பாதுகாக்கும் போது வெளி இடமொன்றில் தரவுத்தளமொன்றினைப் பேணுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக பொறியியற் பிரிவு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

ஈ. இலங்கை அரச பெருந்தோட்டத்துறை கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவை பேச்சுவார்தைகளை நடாத்தி இப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

உ. ரஜரட்ட சேவை தற்போது செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் காணி உரிமையினைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊ. விசாரணை அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளுக்காக சட்டப் பிரிவிற்கு உசாவப்பட்டுள்ளது.

3.2 **விளைவற்ற.். குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

அ. மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான இந்த வாகனம் அந்நிறுவனத்திற்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆ. பழுதுபார்க்கப்பட்டு கூட்டுத்தாபனத்தினால் பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பினும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அறிவித்தல படி அக்கட்டடத்தினை இடித்து அகற்ற வேண்டும் என்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் இன்னும் பேச்சுவார்த்தை மட்டத்தில் உள்ளன.

3.3 **கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

அ. தொலைத்தொடர்பு ஒழுங்கமைத்தல் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய தொகைக்கு சலுகையொன்றினைப் பெற உரிய பிரிவுடன் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கின்றது.

ஆ. இவ்வருவாயினை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இ. ஏற்கனவே கூட்டுத்தாபன ஊழியர்களிடமிருந்து அறவிட்டுள்ளதுடன், மீதமுள்ள நிலுவையினை கூட்டுத்தாபன சபைக்கு அனுப்பப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கு உள்ளது.

ஈ. வழங்கல் முற்பணம் 2019ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டுள்ளது.

உ. இத்தொகையினை அறவிடுவதற்கு முடியாதுள்ளதுடன், புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கு உள்ளது.

ஊ. கணக்குகளின் படி தற்போதுள்ள நிலுவைகளை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், கடன்பட்டோர் இணங்காமைக்கு எழுத்துமூல காரணங்களைக் குறிப்பிட்டு இருப்பின் அது தொடர்பில் கவனஞ் செலுத்தலாம்.

எ. ஏற்கனவெ ஊவா ஒலிபரப்பில் பணம் அறவிடப்பட்டுள்ளதுடன், 2021.02.16ஆந் திகதியாகையில்

5,104,984.04 ரூபா அறவிட வேண்டியுள்ளது.

3.4 **நிதி முகாமைத்தவம்**

2019ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட பற்று அனுப்புகைகள் மற்றும் வரவு அனுப்புகைகள் சரி செய்யப்பட்டுள்ளன.

3.5

அ. கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை ஆகும்.

ஆ கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை ஆகும்.

இ. கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை ஆகும்.

ஈ. அறவிடவேண்டிய நிலுவையாகக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

உ. கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை ஆகும்.

3.6 **மனிதவள முகாமைத்துவம்**

அ. கூட்டுத்தாபனத்தினால் ஆட்சேர்ப்புப் படிமுறையினைத் தயாரித்து அமைச்சின் பரிந்துரையுடன் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆ. அத்தியாவசிய பதவிகளுக்காக மாத்திரம் சேவை தேவையின் கீழ் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

……..
தலைவர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

306.்.72,

பொல்தூவ வீதி,

புத்தரமுல்லை.

கணம் ஐயா,

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இறுதிக் கணக்குகள் - 2018

நிதிச் சட்டத்தின் பிரகாரம், நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல், கணக்கீட்டுக் கொள்கைகள், குறிப்புக்கள், கணக்குகளுக்கான சரிபார்த்தற் பட்டியல் ஆகியவற்றை உள்ளடக்கிய2018 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றன.

உண்மையுள்ள,

மாலக்க தலவத்த

தலைவர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

2019 மே 21

பிரதிகள் : செயலாளர், வெகுசன ஊடக அமைச்சு

பணிப்பாளர் நாயகம், பொது முயற்சிகள் திணைக்களம்

Sri Lanka Broadcasting Corporation

Annual Report

and

Accounts Statements

1st January to 31st December 2018

Minister of Mass Media,
Ministry of Mass Media,
Colombo.

Hon. Minister

The annual report of the corporation for the year ended 3rd December 2018 according to 14 (1) close of number 38 0f 1971 finance act, with covering document is submitted herewith.

1. An administrative report of the tasks performed by the Sri Lanka Broadcasting corporation for the year from 1st January 2018 to 31st December 2018.
2. Accounts report for the accounting year from 1st January 2018 to 31st December 2018.
3. Auditors report on final accounts for the year ended on 31st December 2018.
4. The comment submitted by the corporation on the auditor general's report for 2018.

Chairman,
Sri Lanka Broadcasting Corporation,
Colombo 07.

Index

Page Numbers

1. Administrative Report 01-10
2. Annual accounts statement 11-36
3. Auditor General reports on the financial statement 37-50
4. Corporation's comment on 2018 auditor general's report 51-56

Sri Lanka Broadcasting Corporation

Vision

Providing ideals for good electronic media culture.

Mission

Engaging in a media mission for personal development that makes multi-racial, multi-language, multi-religious society's reconciliation, economic development and democratic value system stronger.

Objectives

1. Gathering important events on the world political, economic and societal events and clearly informing the people.
2. Providing space to gather common knowledge to be active persons in society where they live.
3. Building up a common knowledge fund for society.
4. Identifying challengers for the continuation of humans and providing necessary knowledge.
5. Promoting and transmission of society's speedy and final objectives.
6. Helping to clear fundamental definition on common factors.
7. Providing knowledge and encouragement for person's skills, character and knowledge development.
8. Identifying national or a community culture, protection and development.
9. Taking action for entertainment.
10. Taking measures to create understanding, co-existence and honour among various community groups.
11. Updating and implementing new technological changes.

ADMINISTRATIVE REPORT

2018

Administrative Report – 2018

Introduction

The Sri Lanka Broadcasting Corporation has been established since 5th January 1967 under parliament act of number 37 of 1966.

This report covers the time period of 12 months from 1st January to 31st December 2018.

The following members were in the corporation board during the period under review.

January to 2nd May 2018

Mr. Siddi M Farook	Chairman/board member
Mr. DanushkaRamanayaka	Board Member
Attorney at low SudarshanaGunawrdana	Board Member
Mr. M.J.R David	Board Member
Mr. B.K.R Balasooriya	Treasury representative

14th May to 28th October 2018

Mr. Siddi M. Farook	Chairman / Board Member
Mr. M.J.R David	Board Member
Ms. MaheshiniKolonne	Board Member
Attorney at Law Naveen Shanaka	Board Member
Mr. SamanMuthukumarana	Board Member
Mr. B.K.R Balasooriya	Treasury representative

28th October to 20th December 2018

Dr. SomarathnaDissanayaka	Chairman / Board member
Mr. H.A.S Kumarsinghe	Board Member
Mr. M Amarasinghe	Board Member
Mr. H.M.B.P Herath	Board Member
Mr. BopageNimalaweera	Board Member
Mr. B.K.R Balasooriya	Treasury representative

Administrative Report

Sri Lanka Broadcasting Corporation which, has Sri Lanka's largest radio network is the state radio organization which is the pioneer of electronic media with ownership of many national and regional channels. The corporation owns a human resource with special talents. The corporation staff which shoulders a major mission to take the Sri Lankan community mind to wisdom from entertainment while protecting national identities, has been won awards at various award ceremonies.

The programs broadcast by the corporation in 2018 and award winners a mentioned below.

- ❖ Mr. SujeewaHarischandra - Best news reader (Sinhala Media) Radio state awards
- ❖ Ms. ChithraKumariKalubowila - Best news reader (Sinhala Media) Radio state awards
- ❖ Mr. M.S.M Feroz - Best news reader (Tamil Media) Presidential award
- ❖ Ms. AnushaMoraes - Best Children's programme (Tamil Media)

- **<u>Sinhala National Service</u>**

  National service has taken steps to present many programmes to listeners in 2018 with the aim of performing national responsibility entrusted with Sinhala National service as the inaugural Sinhala radio channel of the Sri Lanka Broadcasting corporation. A considerable time has been allocated in 2018 from air time of the national service for education and children's programme. Apart from that the national service has allocated airtime for cultural, political and incidence in society of national importance. New programmes and standard reports have been presented by paying a special attention to Independence Day, Sinhala and Tamil New Year, Wasak festival, May day, Poson festival and Christmas. Various programme have been broadcast in 2018 for aesthetic taste. A considerable has been allocated for air time for listeners pleasure by maintaining programmes such as Gee Harasaraniya, Ruupana, Ran Geesara, UlpathAsala and WishwaMadhu. There is a high response from listeners to drama programmes and a drama unit of the broadcasting corporation is addressing various social strata while protecting standards of radio voice acting and Sinhala National service gives more opportunity for them. Various programs have been broadcast to promote cinema in 2018.

  While paying a special attention to agriculture, irrigation culture and farming without toxins, programmes that were done earlier, have been continued in 2018 and WaariMandapaya and ThirasaraGovithenakSurakshithaHetak are main among them. Sinhala National service from its inception to date, has worked to create a knowledgeable society and with the aim of uplifting women has made efforts to promote Sri Lankan women's social, political, cultural knowledge.

- **Education Service**

  English, communication, political science, bio science, for advance level students and science, Sinhala, history, maths, English programs for O/L students as well as ShilpaMaduluyata, DemalaKathakaramu and ShishyathwaJayahuruwa programs were broadcast in 2018.

  English, Tamil, Bio Science, Geography for A/L students and Tamil, Science, Maths and English programmes were broadcast over Tamil National service.

  Apart from that programs to assist in common examinations such as O/L, A/L and Scholarship were conducted in 2018 as in previous years. Discussion programs on common problems were broadcast with the participation of commissioner general of examinations and exam commissioners.

- **Commercial Service**

  Commercial service of the Sri Lanka Broadcasting Corporation in order to ensure people's right to information has broadcast current, entertainment, discussion and aesthetic programs in 2018. Among them Dawasey Pibidena Geethaya, Obey Namin Gee, Geetha Sambhawanawa, Swara Wasanthaya programs for entertainment, Arogya Paramalaba, Suwa Arana, Sathiye Waidya Sayanaya programs for a healthy life, Sala Ru Seya paying a special attention to films, Nomiyena Minisun and Sathutu Kedalla programs which includes information about artists and SarasaviRangamadala presented as a drama, takes a main place.

- **City FM Service**

  The City FM service has presented a large number of programs in 2018 with the aim of becoming more popular and productive commercial channel by overcoming challengers in a competitive framework by presenting information with a national responsibility, correctly and trustworthy for a meaning full youth generation. Special programs have been presented for independents day, Sinhala and Hindu new year, Wesaak festivaland Christmas. Mihira Manaramprogram was broadcast with the aim of enhancing esthetic tastes of school children and it was produced by visiting various schools and with the participation of children. City FM service with the sponsorship of Bank of Ceylon organized AradhanaSwara Dehena show in 2015 with the participation of veteran singers such as Victor Rathnayaka, T.M Jayarathne, Neela Wickremasingheand Sunil Edirisinghe. The show was held at the Bank of Ceylon headquarters and at Nelumpokuna Theater. Golden melodies programme was presented with the participation of veteran violinist D.D Gunasena, jointly by Radio Sri Lanka and City FM. SihinaLowak music show was successful presented in memory of Clarence Wijewardhana at the arcade premises. Giving media support to governments development programes, a live studio transmission was maintained at enterprice Sri Lanka exhibition premises. A special transmission was maintained in front of the SLBC new building paroral to the international books exhibition.

- **Tamil National Service**

  The Tamil national service has broadcast many social economic, political, education and entertainment programs in 2018 while protecting cultural identities of the Tamil people. Cultural programs such as Thaipongal day and SaraswathiPujawahave been broadcast for a long time over the Tamil national service and special live programs were broadcast in 2018 in this regard. Measures have been taken to enhance knowledge of other religions by the people who speak Tamil language through broadcasting "YawaiTharakadarshanam", "Deepam", Wasak, Poson festivals and special programs on Haj festival. Apart from that programs have been broadcast on special days with national importance. Programs have also been broadcast in connection with New Year Island wide, independence day, May day, Drugs irradiation day, world children's day, and international women's day.

- **Threndal Service**

  The Sri Lanka Broadcasting Corporation has launched Threndal service in Tamil medium targeting the youth community. In 2018, Threndal service has broadcast national, religious, political, social programs while safe guarding Tamil cultural identity. Threndal service

- **Muslim Service**

  The Muslim Service of the Sri Lanka Broadcasting Corporation is the only radio channel that broadcast programs based on Muslim culture and Islam in Sri Lanka's Muslim community over the years. Muslim Service, which is being broadcast during the air time of Tamil national service is hugely popular among the Muslim community. Muslim service broadcast programs with about 85 percent at sponsorships, has generated a massive income in 2018 for Sri Lanka Broadcasting Corporation. Although programs were broadcast in an ethnic basis, it has broadcast many programs for Muslim community as well as for listeners who speak Tamil language and to promote unity, co-existence and corporation among races. Various religious program, educational programs, music programs, children's and women's programs, youth programs and programs with national importance have been broadcast during this air time.

- **English Service**

  A community with a special taste for a long time has gathered around Radio Sri Lanka which is the English medium radio channel of the corporation. Programs on culture, religion, society, entertainment and current affairs have been broadcast in 2018 by Radio Sri Lanka. Special programs have also been presented in connection with days of national and international importance. A large number of listeners who like classic songs have gathered round Radio Sri Lanka and the main task of the English Service of SLBC is to present quality and entertainment programs and classic songs in the English Records Library. In 2018, Golden Melodies program with participation of veteran violinist D. D. Gunasena was presented jointly by Radio Sri Lanka and City FM. Sports Round Up program was launched in 2018 and this program covered sports events live, held in various parts of the country.

- **Rajarata Service**

  Rajarata Service is recorded in the history as Sri Lanka's first regional radio service. It has contributed special songs and dramas to the country's art field, introduced and still introducing a large number of artists. In 2018, Rajarata Service in recognition of its national and regional duties, has produced and broadcast programs. Opening of media training school of the Rajarata Service is a special event that took place in 2018.

  Religious programs based on Poya days, Sinhala-Hindu New Year programs, Independence Day programs, Vesak, Poson programs, Christmas programs, May Day programs, Drugs Eradication Day programs, Women's Day programs and World Children's Day programs were presented in 2018.Special kidney disease prevention programs and agricultural programs have been broadcast and a special music evening was held to mark the 39th anniversary of the Rajarata Service.

- **Wayamba Handa**

  Wayamba Handa is the regional radio channel that covers north western areas that country. In 2018, programs have been produced to inform the public about regional an national events. Programs have been produced on important national and international days and religious festival. Programs on heart disease and kidney ailments have been produced and broadcast to educate the public. Programs on environmental week, anti tobacco day, artists, songs and education have been broadcast in 2018. Programs to invoke blessings to mark the 9th anniversary of Wayamba Handa radio have been produced.

- **Radio Dambana**

